# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 08 புதன்கிழமை [25-08-1999] UTHAYAN A LivelyNationalTamilDaily கதிர்: 233


# 9 தற்கொலை குண்டுதாரிகள் தலைநகருக்குள் ஊடுருவல்!

## தேடுதலில் 210 தமிழர்கள் கைது!

கொழும்பு, ஓகஸ்ட் 25

கொழும்பு நகருக்குள் ஒன்பது தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவியிருப்பதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து கொழும்பில் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் இரவு பொலீஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 210 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் ரி. என். டி. சில்வா இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறத்திலும் தாக்குதல்களை மேற்கொள்வதற்காக ஒன்பது தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்புக்குள் ஊடுருவியிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது என்றும்—

அவர்களைக் கண்டுபிடிக்கும் நோக்கில் நேற்று முன்தினம் இரவு முதல் பெரும் தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும்—

அவர் தெரிவித்தார்.

தமிழ்மக்கள் ஐதாக வாழும் பிரதேசங்களான தெமட்டக்கொட, பொரளை, கிருலப்பனை, ராஜகிரிய ஆகிய பகுதிகளில் தேடுதல் நடத்தப்பட்டது என்றும்—

அச் சமயம் 210 தமிழர்கள் கைது செய்யப்பட்டு அந்தந்தப் பகுதிப்பொலீஸ் நிலையங்

[12 ஆம் பக்கம் பார்க்க]

## பூநகரி பகுதி நோக்கி ஷெல் தாக்கு

வவுனியா, ஓக. 25

பூநகரிப் பகுதியை நோக்கி நேற்றுக் காலை 8-45 முதல் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சேத விவரம் தெரியவரவில்லை.

(உ-3)

### 'உதயன்' மீதான தாக்குதல்:

## மற்றொரு கட்சியைக் குறிப்பிட்டு குற்றம் சுமத்துகின்றது புளொட்!

யாழ்ப்பாணம், ஓக. 25

'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீதான குண்டுத் தாக்குதலுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து இயங்கும் மற்றொரு தமிழ்க் கட்சியே காரணம் என்று தங்களின் புலனாய்வுத் தகவல்களின்படியும், சம்பந்தப்பட்ட கட்சியின் உள்ளகத் தகவல்களில் இருந்தும் இனங்காணக்கூடியதாக இருக்கின்றது என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்டின்) உப தலைவர் என். மாணிக்கதாசன் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

''அன்றைய பத்திரிகையில் பிறிதொரு இயக்கத்தைச் சாடி செய்திகள் வெளிவந்திருந்தன. இரவுநேரம் தாக்குதலை நடத்தி அந்தப் பழியை அந்தப் பிறிதொரு இயக்கத்தின் மீது போடும் குள்ளநரித்தனத்துடன் இந்தக் கப

(11 ஆம் பக்கம் பார்க்க)

### தீர்வுத் திட்டம் குறித்து ஆராய

## பீரிஸ் - ரணில் நாளை சந்திப்பு

கொழும்பு, ஓக 25

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம் தொடர்பாக நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸும், எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நாளை சந்தித்துப் பேசவிருக்கின்றனர்

அரசுக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கவுக்கும் இடையில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இம்மாத இறுதிக்குள் பொது இணக்கப்பாடு ஒன்றை எட்டச் செய்

[12 ஆம் பக்கம் பார்க்க]

## கனடாவில் ஈழத் தமிழர் 3 வயது மகனுடன் தற்கொலை!

### ரயில் முன் பாய்ந்து!

ரொரண்டோ, ஓக. 25

கனடாவில் ஸ்காபரோ நகரில் விக்ரோரியா சப்வே ரயில் நிலையத்தில் ஈழத் தமிழர் ஒருவர் தனது 3 வயது குழந்தையுடன் ரயில் முன் யாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஜெயபாலன் பாலசிங்கம் ( 47 வயது — புங்குடுதீவு, 11 ஆம் வட்டாரம் ) என்பவரும் அவரது மகனான சஜந்தன் (3 வயது) என்பவருமே உயிரிழந்தார்கள்.

இந்த மரணத்துக்குக் குடும்பப் பிரச்சினையே காரணம் எனக் கூறப்பட்டாலும் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறியப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த இரு மாதங்களாக வேலையற்று இருந்த இவர் வாழ்க்கையில் வெறுப்படைந்து சித்தசுவாதீனமற்றவராக இருந்தார் என்றும் கூறப்படுகின்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுப்புள்ளி அதிகரிப்பை கண்டித்து வன்னி மாணவர்கள் போராட்டம்

வவுனியா, ஓக, 25

பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளி அதிகரிப்பைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட உயர்தர வகுப்பு மாணவர்கள் தொடர் போராட்டங்களை நடத்துவதென நேற்று முடிவுசெய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாலயத்தில் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களும் உயர்தர வகுப்பு மாணவர்களும் இணைந்து நடத்திய கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது,

விஞ்ஞானகூடவசதிகள்உட்பட கல்வி வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழும் முல்லை மாணவர்களின் வெட்டுப்புள்ளி அதிகரிக்கப்பட்டுள்ளதால்பல்கலைக்கழக அனுமதிகிடைக்காமல் போவதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த முறையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

[12 ஆம் பக்கம் பார்க்க]

## ஐ. தே. க. மகளிர் அணி நேற்று வீதி மறியல்!

கொழும்பு, ஓக. 25

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பெண்களுக்கு எதிராகச் செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டி ஐ. தே. கவின் மகளிர் அணியினர் நேற்று நண்பகல் வீதிமறியல் போராட்டம் நடத்தினர்.

ஐ.தே.க. ஆதரவில் கடந்த 15 ஆம் திகதி நடத்தப்பட்ட ஊர்வலத்தில் பங்குபற்றிய பெண்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும்—

பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுவதைக் கண்டித்தும் —

ஏற்பாடாகிய இந்தப் போராட்டம் கொழும்பு—கொம்பனித்தெருச் சந்தியில் இடம்பெற்றது.

காலை 10.00 மணியளவில் ஹைட்பார்க் கோணரில் கூடிய பெண்கள் அங்கிருந்து ஊர்வலமாகச்சென்று கொம்பனித்தெருவில் வீதியை மறித்து அமர்ந்து இருந்து அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

(உ-3)

## மட்டு. பொலீஸ் நிலையம் தாக்குதல் இலக்கு?

மட்டக்களப்பு, ஓக. 25

மட்டக்களப்பு பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்த குண்டு நிரப்பப்பட்ட வாகனம் ஒன்று வருவதாக கிடைத்த தகவலை அடுத்து

[12 ஆம் பக்கம் பார்க்க]

## பயணிகள் கப்பல் சேவை நாளை

யாழ்ப்பாணம், ஓக 25

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு நாளை புறப்படவிருக்கும் 'லங்கா முடித்த' கப்பலில் பயணம் செய்வதற்காக டிக்கெட் பெற்றவர்களை இன்று காலை 9 மணிக்கு பயண

[12 ஆம் பக்கம் பார்க்க]

## இந்த ஆண்டில் தேர்தல் எதுவும் இல்லை!

கொழும்பு, ஓக. 25

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை இந்த ஆண்டு நடத்தக் கூடிய சாத்தியம் இல்லை என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தேர்தல்களை தற்போதுள்ள சூழ்நிலையில் இந்த வருடத்தில் நடத்த வேண்டாம் என்றும்—

அடுந்த வருடமே தேர்தல்களை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும்—

அரசாங்கத்துக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அழுத்தம் கொடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம்

[12 ஆம் பக்கம் பார்க்க]

## செம்மணி விசாரணைக்கு குமார் இங்கு வருவார்?

யாழ்ப்பாணம், ஓக. 25

எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ் நீதிமன்றத்தில் ஆரம்பமாகவிருக்கும் செம்மணிப் புதைகுழி தொடர்பான விசாரணைகளின் போது காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் சார்பில் சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் ஆஜராவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார் என கைதாகிக் காணாமற்போனோர் பாதுகாவலர்சங்கத்தினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாகத் தாங்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று அவர் யாழ். வரச் சம்மதித்துள்ளார் என்றும்—

அவரைச் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் யாழ். அழைத்து வர தாம் முயற்சி எடுத்துள்ளதாகவும்—

இது விடயமாகத் தமது அமைப்பினர் செஞ்சிலுவைச்

[12 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு நேர நீதிமன்றம்

இலங்கையின் முதலாவது இரவுநேர நீதிமன்றம் அடுத்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கின்றது — அளுத்கடவில் இயங்கும் இந்த நீதிமன்றில் மாலை 4 மணிமுதல் இரவு 8 மணிவரை வழக்குகள் விசாரிக்கப்படும் இந்த நீதிமன்றத்தில் முதல் முதலில் போக்குவரத்து தொடர்பான வழக்குகளே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

ஒரு லட்சத்துக்கும் மேலான போக்குவரத்து தொடர்பான வழக்குகள் விசாரிக்கப்படாமல் உள்ளன. அந்த வழக்குகளை விசாரிக்கும் பொருட்டே இரவு நேர நீதிமன்றம் உருவாக்கப்பட்டதாக நீதி அமைச்சின் செயலாளர் ஜயசிங்க தெரிவித்தார். (இ-க-8)


யாழ்ப்பாண மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர்கள், வைத்தியர்கள், மருத்துவபீட நலன் விரும்பிகளுடனான

## கலந்துரையாடல்

மருத்துவக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு என்பவற்றில் எமது மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி தீவிரமாக ஆராயவேண்டியுள்ளது. எனவே அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

இடம்:- விரிவுரை மண்டபம், யாழ். மருத்துவபீடம்
திகதி:- **30-08-1999** (திங்கள்)
நேரம்:- **3.30** P. M.

உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பினை மருத்துவ மாணவர்கள் அன்புடன் எதிர்பார்க்கின்றனர்.

குறிப்பு:- **14ம், 15ம், 16ம், 17ம், 18ம், 19ம். 20ம்** அணி மாணவரின் பெற்றோர்களுடன் புதிதாகஅனுமதி பெற்றுள்ள மாணவர்களின் பெற்றோர்களும் (98/99, 99/2000) தவறாது சமுகமளித்து ஒத்துழைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

மருத்துவ மாணவர் ஒன்றியம்
(68461) யாழ். பல்கலைக் கழகம்



தொழில் நுட்பக்கல்லூரி யாழ்ப்பாணம்

## இறுதிப் பரீட்சைக்கான விண்ணப்பம் - 1999

1995 ஆம் ஆண்டு பரீட்சைத்திணைக்களத்தினால் நடாத்தப் பெற்ற பரீட்சையின் போது நூனசித்தி பெற்ற பரீட்சார்த்திகள், இவ்வருடம் வழங்கப்படும் இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பரீட்சைக்கு விண்ணப்பிக்கவும்.

முடிவு திகதி: 30 – 08 – 1999 ஆகும்.

விண்ணப்பதாரர்கள் பகுதித் தலைவர்களுடன் தொடர்பு கொள்ளவும்:

எஸ். செந்தில்நாதன்
அதிபர்

தொழில் நுட்பக்கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
24-08-99 (சி/8630)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லம்மா தருமலிங்கம்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி நல்லம்மா தருமலிங்கம் அவர்கள் 24-8-99 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தருமலிங்கத்தின் அன்பு மனைவியும் தருமராசா, துரைராசா, செல்வராசா, தம்பிராசா, மங்கையற்கரசி, புவனேஸ்வரி, பாலசௌந்தரி, புஸ்பாம்பிகை, ஞானமனோகரி, யோகேஸ்வரி, தயாரதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26-8-99) நாளை வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புவனேஸ்வரி (மகள்)
பாலகிருஸ்ணன் (மருமகன்)

புதுச்செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
கனடா தொலைபேசி இலக்கம்;- 780-462-9704
(68462)

## இராமலிங்கம் இராசா

(பிரசித்த நொத்தாரிசு)

70, செம்மணி வீதி நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகக்கொண்ட இராமலிங்கம் இராசா அவர்கள் 23-8-99 திங்கட்கிழமையன்று காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகேஸ்வரன் (ஆசிரியர்), நாகேஸ்வரி (சுகாதாரத்திணைக்களம், கொழும்பு), கௌசலை (ஸ்சுப்பத்தன மகா வித்தியாலயம், கொழும்பு), அரசகுலசூரியன் (ஆசிரியர், யா/கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்), இராமலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (24-8-99) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. அரசகுலசூரியன்
(மகன்)

70, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு. (68464)

# சமய சந்நிதிகளில்

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறும்.

நாளை வியாழக்கிழமை காலை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (க-17)

★ ★ ★

கைதடி வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகப் பெருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. கும்பாபிஷேகம் சிவஸ்ரீ பிச்சு சந்துருகுருக்கள் தலைமையில் நடைபெறும். அன்றுமாலை மணவாளக் கோலவிழாவும் இடம்பெறும். (க-74)

★ ★ ★

சுன்னாகம் தெற்கு அருள்மிகு சிவபூதவராயர் ஆலய அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.05 மணிக்கு நடைபெறும்.

பூர்வாங்கக் கிரியைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும். (க-27)

★ ★ ★

நாவற்குழி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை காலை நடைபெறும்.

★ ★ ★

யாழ். போதனா வைத்திய சாலை சாமுண்டிகாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவ சுவாமி தேவஸ்தான மணவாளக்கோல அஷ்டோத்திர சத கலச சங்காபிஷேகம் இன்று நடைபெறும்.

காலை 10 மணிக்கு இடம்பெறும் மகேஸ்வர பூசையைத் தொடர்ந்து பிற்பகல் 1 மணிக்கு ஞானவைரவசுவாமி வீதி வலம் வருவார். (இ-3)

## பாராட்டு விழா

சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ள எஸ். கே. தங்கவடிவேலுவுக்கு கோப்பாய் மக்கள் ஏற்பாடு செய்துள்ள சேவைநலன் பாராட்டு விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது, (உ-3-180)


நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று
காதல் இளவரசன் விஜய்
தேவயானி, ரம்பா
மணிவண்ணன் நடித்த
நினைத்தேன் வந்தாய்
காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]
(68392)



ராஜா
யாழ்ப்பாணம்
பிரசாந்த் – ஐஸ்வர்யா
நாசர் நடித்த
ஜீன்ஸ்
10-30, 2-30
(புதிய நேரம்)
(கி/8561)



லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
விஜய்
நடித்த
ரசிகன்
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2-30
(68360)


# பத்திரிகை மீதான தாக்குதலுக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக. 25

கடந்த சனிக்கிழமை இரவு 'உதயன்' அலுவலகம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை பல அமைப்புக்கள் தொடர்ந்து கண்டித்து வருகின்றன அவற்றின் விவரம் வருமாறு:-

### ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்

மேல் மாகாண சபை உறுப்பினரும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான மனோ கணேசன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

மிக மோசமான மனித உரிமை மீறல்கள் அரசியல் ஒடுக்குமுறை ஆகியவற்றிற்கு மத்தியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் யாழ். தமிழர்களின் மன உணர்வுகளை வெளியுலகிற்கு படம் பிடித்துக் காட்டும் அரிய பணியிலே ஈடுபட்டிருக்கும் பத்திரிகையான உதயனின் அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சுத் தாக்குதல் கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டிய கீழ்த்தரமான ஒரு சம்பவமாகும். மேலும் இச்சம்பவத்துடன் விடுதலைப் புலிகளுக்கோ இராணுவத்தினருக்கோ தொடர்பேதும் இல்லை. ஆனால் சில தமிழ் கட்சிகள் இதில் சம்பந்தப்பட்டிருக்க சாத்தியம் உண்டு என்று வெளியாகியுள்ள தகவல் தென்னிலங்கை தமிழர்களை எரிச்சலுக்கு உள்ளாக்கியுள்ளது. மிகவும் அசாதாரணமான ஒரு சூழ்நிலை நிலவும் பிரதேசத்திலிருந்து வெளியாகிக் கொண்டிருக்கும் இந்த நடுநிலைக் குரலையும் நிறுத்திவிட்டால் யாழ். தகவல்களை அறிந்து கொள்ள சாதாரண மக்களும் பல சந்தர்ப்பங்களில் தென்னிலங்கை செய்தி நிறுவனங்களும் பலத்த நடைமுறைச் சிக்கலுக்கு உள்ளாக வேண்டி வரும். முரண்பாடுகள் எவ்வளவுதான் ஆழமானதாக இருந்தாலுங் கூட, அது குறைந்த பட்ச அடிப்படை நியதிகள் மீறப்படுவதை நியாயப்படுத்தாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் பேரினவாத அமைப்பிற்கு இச் சம்பவத்துடன் நேரடி தொடர்பு இல்லை என்று சொல்லப்பட்டாலும் கூட, இத்தகைய நடவடிக்கைகளின் இறுதி விளைவு பேரினவாத அமைப்பின் நலனையே சார்ந்து நிற்கின்றது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுதந்திர ஊடக இயக்கம்

சுதந்திர ஊடக இயக்கச் செயலாளர் சுனந்த தேசப்பிரிய தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

உதயன் பத்திரிகை நிறுவனம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அப்பகுதியில் நடத்தப்பட்டுள்ள தாக்குதல் குறித்து விசாரணை நடத்தி குற்றவாளிகளை வெளிக்கொணர்வது அரசாங்கத்தின் கடமையாகும்.

பத்திரிகைச் சுதந்திரத்துக்கு ஊறுவிளைவிக்கும் இத்தகைய சம்பவங்களில் இனியும் ஈடுபடவேண்டாம் என்று சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இத்தகைய தாக்குதல் சம்பவத்தின் மத்தியிலும் உதயன் பத்திரிகை நிறுவனம் தனது சேவையைத் துணிச்சலுடன் தொடரவேண்டும்.

### வன்னி மாணவர் ஒன்றியம்

வன்னி மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'உதயன்' பத்திரிகை யாழ். குடாநாட்டில் இருந்து தொடர்ந்து வெளிவரும் நாளிதழ். பல்வேறு நெருக்கடிகள், கெடுபிடிகளுக்குமிடையில் உண்மைச் செய்திகளை வெளிக்கொணரும் துணிச்சலான பத்திரிகையென்ற பெயருடன் தொடர்ந்தும் வெளிவருவது யாவரும் அறிந்ததே.

வன்னிப் பகுதியில் இடைவெளியில்லாமல் தொடரும் யுத்த தாக்கங்களையும் அதனால் மக்கள் அனுபவிக்கின்ற சொல்லொணாத் துன்பங்களையும், பொருளாதார நெருக்கடிகளையும் போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பான செய்திகளையும் உடனுக்குடன் குடாநாட்டு மக்களுக்கும் வெளியுலகிற்கும் வெளிக்கொணர்வதில் தனது பங்களிப்பை தவறாமல் செய்து வருகின்றது,

இவ்வாறான ஒரு சுதந்திர மக்கள் தொடர்பு ஊடகத்தின் மீதான கைக்குண்டு வீச்சானது விசனத்திற்குரியதே.

இந்த இழிசெயலை எத்தரப்பு செய்தாலும் அது கண்டுபிடிக்கப்பட வேண்டிய, கண்டிக்கப்பட வேண்டியதொன்றே.

இவ்வாறான தான்தோன்றித்தனமான செயல்கள் தொடர்ந்தும் நடைபெறாமல் பாதுகாக்க வேண்டியது சகல தரப்பினரதும் தலையாய கடமை.

விடுக்கப்பட்ட எச்சரிக்கையை பொருட்படுத்தாது தொடர்ந்தும் நடுநிலைமையுடன் உண்மைச் செய்திகளை வெளிக்கொணர—மக்கள் அறிய — உழைக்க வேண்டுமென்று உதயனை வேண்டுகின்றோம் — என்றுள்ளது.

### மக்கள் ஜனநாயகப் பேரவை

மக்கள் ஜனநாயகப் பேரவையின் சார்பில் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். இராமேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் தினசரி பத்திரிகையான 'உதயன்' பத்திரிகை மீது சனியன்று நடந்த கைக்குண்டுத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மேலும் இப்பத்திரிகை மீதான தாக்குதல் ஜனநாயக விரோதமான செயலாகவே நாம் கருதுகின்றோம். யாழ்ப்பாணத்தில் நிலவும் சம்பவங்கள் அனைத்தையும் பத்திரிகைச் சுதந்திரம் என்ற ரீதியிலும் வெளியுலகிற்குத் தெரியப்படுத்துவதனூடாகப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கும் நீதி கிடைக்கவும் ஜனநாயக விரோத செயல்களைக் கண்டித்தும் கட்டுப்படுத்தவும் அரும்பணி ஆற்றி வந்துள்ளது. இதனால் பல அச்சுறுத்தல்களைச் சந்தித்தும் வந்ததை அனைவரும் அறிவர். ஆனாலும் தனது பணியைச் சரிவரச் செய்து வந்ததை யாரும் மறந்துவிட முடியாது.

இந்நிலையில் இப்பத்திரிகை அலுவலகத்தைத் தாக்கியுள்ளமை பத்திரிகைச் சுதந்திரத்தை மாத்திரம் இன்றி யாழில் நிலவும் ஜனநாயக விரோத செயல்களை வெளியில் வருவதைத் தடுப்பதாகவும் அமைகின்றது என நாம் கருதுகின்றோம்.

இன்று யாழ். மக்கள் உள்ள நிலையில் இப்பத்திரிகையின் அவசியத்தைப் புரிந்து கொள்ளாது நடந்து கொள்வது

[11ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரிய - சீன அமைச்சர்கள் சந்திப்பு

சோல், ஓக. 25

நாற்பது ஆண்டுகளின் பின்பு சீன மற்றும் தென் கொரிய பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திக்க உள்ளனர்.

வடகொரியாவின் புதிய எறிகணைப் பரிசோதனை முயற்சியை தடைசெய்யும் நோக்கத்துடன் தென்கொரிய பாதுகாப்பு அமைச்சர் சீனா சென்றுள்ளார்.

1950-53 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கொரியப் போரின் போது சீனா வடகொரியாவுக்கு ஆதரவாக செயற்பட்டது தெரிந்ததே.

இதேவேளை —

வடகொரியாவின் ஏவுகணைப் பரிசோதனை குறித்து ஜப்பானுடன் கலந்துரையாடுவதற்கு தென்கொரிய வெளியுறவுச் செயலர் ரோக்கியோ சென்றுள்ளார். (இ-க)

# ரஷ்யப் படைக்கு எதிராக அல்பேனியர் வீதித் தடை

பிரிஸ்ரீனா ஓக. 25

தென் கொசோவோவில் உள்ள மொறகமாஷ் நகரில் ரஷ்யப் படைகள் தமது அமைதிப் பணியை மேற்கொள்வதை தடைசெய்யும் முகமாக ஆயிரக்கணக்கான அல்பேனியர்கள் வீதித்தடைகளை ஏற்படுத்தினர்.

நகரின் உள்ளே செல்ல ரஷ்யப் படைகள் மூன்று தடவைகள் முயன்றன. ஆனால் ஒவ்வொரு தடவையும் திருப்பி அனுப்பப் பட்டுவிட்டன.

ரஷ்யர்கள் மொறகமாஷ் நகரில் உள்ள சேர்பியருக்கு ஆதரவாக செயற்படுவார்கள் என அஞ்சியே அல்பேனியர்கள் இந்த வீதித்தடைகளைப் போட்டனர்,

இந்த நகரில் தற்போது ஜேர்மன் அமைதிப் படையினரே தங்கி உள்ளனர்.

ஜேர்மன் படைகள் வெளியேறி அந்த இடத்தை ரஷ்ய அமைதி காக்கும் படை பொறுப்பேற்கவுள்ளது.

இன்று தமது படை இந்த நகருக்குள் செல்லும் என ரஷ்ய இராணுவத் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(இ-க)

# மூப்பனார் பேச இருந்த கூட்டத்தில் கல்வீச்சு

உசிலம்பட்டி, ஓக. 25

உசிலம்பட்டியில் மூப்பனார் பேசவிருந்த பொதுக் கூட்டத்தில் கல்வீச்சு இடம்பெற்றதால் கூட்டம் பாதியிலேயே முடிவடைந்தது.

இந்தக்கூட்டத்தில் த.மா.கா. கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் பேசிய போதே கல்வீச்சு நடைபெற்றது. மேடையிலும் கற்கள் விழுந்தன.

இதையடுத்து மூப்பனார் எழுந்து ஒலிபெருக்கியில் பேசுகையில் இதுபோன்ற பல சம்பவங்களை எனது 40 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் பார்த்திருக்கிறேன். இதற்கெல்லாம் நான் அஞ்ச மாட்டேன். இது போன்ற சம்பவங்கள் இனி உசிலையில் நடைபெற்றால் இங்கு எந்த அரசியல் கட்சியும் கூட்டம் நடத்த முடியாது என்று கூறினார்.

இதையடுத்து பொதுக்கூட்டம் ரத்துச் செய்யப்பட்டது.

[இ-8]

# சந்நிதி தேர்த்திருவிழா

பருத்தித்துறை, ஓக. 25

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று புதன் கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் நாளை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

தேர், தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்து சபையும் தனியார் மினி பஸ் சேவைச் சங்கமும் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் விசேட போக்குவரத்து சேவை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளன.

பக்தர்களின் நலன் கருதி ஆலயச் சூழலில் சுகாதாரம் மற்றும் குடிதண்ணீர் வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன.

(சு-118)

# சாவகச்சேரி பகுதி மாணவர் நலன்கருதி பஸ் சேவை

தென்மராட்சி, ஓக. 25

சாவகச்சேரி நகரப் பகுதி மாணவர்களின் நலன் கருதி வடபிராந்தியப் போக்குவரத்துச்சபையினர் செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் புதிய பஸ்சேவையை ஆரம்பிக்கவுள்ளனர்.

பளைப் பிரதேசம் மற்றும் எழுதுமட்டுவாழ், கிளாலி, மிருசுவில் ஆகிய பகுதிகளிலிருந்து சாவகச்சேரிப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களுக்காக தினமும் காலை 7.30 மணிக்கு முகமாலையிலிருந்து சாவகச்சேரி வரை இந்த பஸ்சேவை நடத்தப்பட உள்ளது. யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்களுக்கென உசனிலிருந்து தினமும் பாடசாலைச் சேவை நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் தச்சன்தோப்பு, கோவிலாக்கண்டி, மறவன்புலோ, தனங்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பயணம் மேற்கொள்ளும் தனங்களப்பு, ஊடாக சாவகச்சேரி செல்லும் பஸ் சாவகச்சேரி இந்துக் கல்லூரி வரை சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

மேலும் மருதனார்மடம் கோப்பாய், கைதடி, நுணாவில் ஆகிய இடங்களில் உள்ள நோயாளர்கள், வைத்திய சாலையில் கடமையாற்றும் ஊழியர்கள், கிளினிக்குகளுக்குச் செல்வோர் ஆகியோரின் நலன்கருதி காலையில் மருதனார்மடத்திலிருந்து புறப்படும் 811 மார்க்க பஸ் சேவை சாவகச்சேரி ஆஸ்பத்திரி வரை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இ-117)

## கிரிக்கெட் இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 25

டொனால்ட் கணேஷ குமார் வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்த இறுதிச் சுற்றுப் போட்டியில் கே. சி. சீ. விளையாட்டுக் கழக அணியுடன் யாழ். பல்கலைக்கழக அணி மோத உள்ளது.

(இ-ரி)

# எதிரி பயன்படுத்தினால் பதிலடிக்கு இந்தியாவிடமும் அணு ஆயுதம் தேவை

## வாஜ்பாய் தெரிவிப்பு

சண்டிகர், ஓக. 25

"தற்பாதுகாப்புக்காகவே அணு ஆயுதங்களை இந்தியா தயாரிக்கிறது. உலக வல்லரசு நாடுகள் தம் இருப்பில் உள்ள அணு ஆயுதங்களை குறிப்பிட்ட காலத்துக்கு முற்றாக அழிக்க முன் வந்தால் இந்தியாவும் அழிக்கத் தயாராக உள்ளது."

பிரதமர் வாஜ்பாய் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவின் அணு ஆயுதக் கொள்கை குறித்து வெளியிடப்பட்ட ஆவணம் வெறும் வரைவு அறிக்கைதான். அது இறுதி ஆவணமல்ல, அதிலிருந்துவேறு எந்த முடிவுக்கும் செல்லமுடியாது.

அணு ஆயுதங்களின் கட்டுப்பாடு யாரிடம் இருக்க வேண்டும் என்பது போன்ற விஷயங்கள் தான் அந்த வரைவு ஆவணத்தில் கூறப்பட்டுள்ளன ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அரசின் அணு ஆயுதக் கொள்கைதான் அதில் கூறப்பட்டுள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அணு ஆயுதமற்ற உலகு உருவாக வேண்டும் என்பதே இந்தியாவின் லட்சியம். வல்லரசு நாடுகள் தம் அணு ஆயுதங்களை குறிப்பிட்ட காலத்துக்குள் அழிக்க வேண்டும் என்னும் கோரிக்கையை ஐ. நா. மன்றத்தில் எழுப்ப முயன்றோம். ஆனால், பயனேதும் கிடைக்கவில்லை. எனினும் தொடர்ந்து அப் பிரச்சினையை ஐ. நா. வில் இந்தியா எழுப்பும். ஆனால், இன்றைய யதார்த்த உலக நிலைமையைக்கருத்தில் கொண்டு தான் இந்தியாவும் அணு ஆயுதத் தயாரிப்பில் இறங்கியுள்ளது.

### உலக அரங்கில்

அணு ஆயுதத்தைப் பாவிக்கும் முதல் நாடாக இந்தியா இருக்காது, ஆனால், எதிரி பயன்படுத்தினால் பதிலடி கொடுக்க இந்தியாவிடமும் அணு ஆயுதம் இருக்க வேண்டிய அவசியம்.

இப்படி வாஜ்பாய் கூறினார். (இ-க)

## அணு ஆயுதம்

இந்தியா மேற்கொள்ளவுள்ள அணுவாயுத முயற்சிகளுக்கு 70 கோடி ரூபா செலவாகும் என்று இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசனைச் சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (இ-ரி)

# தாய்வான் விமானவிபத்து

தாய்வான் விமானம் ஒன்று ஹொங்கொங்கில் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருவர் உயிரிழந்தனர் 213 பேர்வரை காயமடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையே இந்தச் சம்பவம் இடம்பெற்றது

செக் லப் கொஜ் விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கும் போது ஒருபக்க சிறகு தரையில் உராய்ந்ததினால் விமானம் தலை கீழாக புரண்டு நிலத்தில் மோதியதால் இயந்திர அறையின் எஞ்சின் ஒன் தீப்பற்றி எரிந்தது. அதனைத் தொடர்ந்து விமானம் முழுவதும் புகை மூட்டம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து மீட்புப் பணியாளர்கள் அந்த இடத்துக்கு விரைந்ததை அடுத்து பெரும்பாலான பயணிகள் உயிராபத்து எதுவுமின்றி தப்பிக்கொண்டனர்.

காயமடைந்த 213 பேரில் 6 பேரின் நிலை மிக மோசமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (இ-க)

# கருணாநிதி - சோனியா ஏமாறப்போவது உறுதி

## மூப்பனார் கூறுகிறார்

திண்டுக்கல், ஓக 25

தேர்தலுக்குப் பிறகு கருணாநிதியும், சோனியா காந்தியும் ஏமாற்றமடையப் போவது உறுதி.

மேற்கண்டவாறு த. மா. கா தலைவர் ஜி கே. மூப்பனார் கூறினார்.

திண்டுக்கல் மக்களவைத் தொகுதி த.மா.கா வேட்பாளர் என் எஸ். வி. சித்தனை ஆதரித்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மூப்பனார் பேசியதாவது:

பொதுவாக தி.மு.க. தலைவர் கருணாநிதி மிகவும் சிந்தித்து முடிவு எடுப்பவர். பா. ஜ. க. ஆட்சிக்கு வந்ததிலிருந்தே தி. மு. க. ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்று ஜெயலலிதா தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்.

ஆனால் அதற்கு பா. ஜ. க. இணங்கவில்லை. இந்த நன்றிக் கடனுக்காக நம்பிக்கை வாக்கெடுப்பின் போது பா. ஜ. க. ஆட்சிக்கு ஆதரவாக தி. மு. க. வாக்களித்ததில் தவறு எதுவும் இல்லை

ஆனால் ஆட்சி கவிழ்ந்த பிறகு பா. ஜ. க. வுடன் கூட்டு என்ற முடிவைக் கருணாநிதி அவசரப்பட்டு எடுத்து விட்டார்.

ஜெயலலிதாவுடன் கூட்டணி வேண்டாம் என்று எவ்வளவோ முறை சோனியாவிடம் வற்புறுத்தி விட்டோம். நல்லவற்றைக் கேட்டுச் செயற்படுவார் என்று நம்பினோம். ஆனால் சோனியா காந்தி அந்த நம்பிக்கையைத் தகர்த்து விட்டார்.

தேர்தல் முடிவுகள் வந்த பிறகு கருணாநிதியும், சோனியா காந்தியும் ஏமாற்றமடையப்போவது நிச்சயம். தாங்கள் எடுத்த முடிவுகளுக்காக இருவரும் வருத்தப்படப் போவது உறுதி.

சிறுபான்மையினர் நீண்டகாலமாக தி மு க வை ஆதரித்து வந்துள்ளனர் தங்களது நலன்களை தி மு க. பாதுகாக்கும் என்று மிகவும் நம்பி இருந்தனர் ஆனால் ஒரே நாளில் சிறுபான்மை மக்களின் நம்பிக்கையைக் கருணாநிதி தகர்த்து விட்டார்.

இப்படி அவர் கூறினார்.

(இ-8)


## இதோ வந்துவிட்டது!

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட

## அமெரிக்க கொரியத் தயாரிப்புக்களான

# டிஸ் அன்ரெனா வகைகள்

| வகை I | வகை II | வகை III |
| --- | --- | --- |
| 6'' Panal Dish<br>Eurostar Receiver<br>Eurostar L N B F. | 6'' Panal Dish<br>Alfagold Receiver<br>Eurostar L N B F. | 8'' Normal Dish<br>Eurostar Receiver<br>Euraostar L N B. F. |
| **வகை IV** | **வகை V** | **வகை VI** |
| 8'' Normal Dish<br>Alfagold Receiver<br>Eurostar L N B: F. | 8'' Polar mount Dish<br>Eurostar Receiver<br>Eurostar L. N B. F, | 8'' Polar maunt Djsh<br>Alfagold Raceiver<br>Eurostar L N. B. F. |

இவற்றின் விலைகளை 25000/- முதல் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் டிஸ் அன்ரெனாவினுடைய பொருள்களான Dish, Receiver வகைகள் L.N B F. என்பனவற்றை

தனித்தனியாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள வேண்டிய

முகவரி:

# அருண் வீடியோ மூவி

பிரதான வீதி, நெல்லியடி.

[68455]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### யாழ்ப்பாணம்

ஓர் ஆசிரியர் ஓய்வுபெறுகிறார் நாடகத்தை யாழ் சேவையில் கேட்டீர்களா? அது போன்ற ஏழு நாடகங்களை யாழ்ப்பாணமா?, கொழும்பா? நாடக நூலில் வாசிக்கலாம். அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியவை. ரூபா 50. (28647)

### FOR SALE

Original Japan English Portable Type Writer In Good Condition Mosquito Killer [Electronic] For Immediate Sale Contact before 28th, R. Bale-subramaniam, 17/1 Brown Road, Jaffna. (68447)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் 2/2, மருதடி வீதியில் ஒரு பரப்புக் காணியில் சகல வசதிகளையும் கொண்ட நான்கு அறைகளை உடைய கல்வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு இ. ஊர்த்துமேரி, இல. 40/05, கோயில் வீதி. யாழ்ப்பாணம். (68381)

### பங்கீட்டுக்கு சீனி

நவாலி, ஓக. 25

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக் கிளைகள் மூலம் அ.இ பங்கீட்டு அட்டைக்கு அரைக் கிலோ சீனி வீதம் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. (இ-100)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் ஒலம்பியா, பகிட், கல்டா, ரெமிங்டன் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: R மருதம், இல. 66, மணிக்கூட்டு வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். (68384)

இசைக்கருவி கார்மோனியம், National rice Cooker பெரியது விற்பனைக்குண்டு. மாலை 4—6 மணிவரை தொடர்புகொள்க: T. ஸ்கந்தராஜா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. (68386)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி புறொலர் மொத்தமாகவும்சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: K. அழகரட்ணம், நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயில் வடக்கு வீதி, T. P. No. 070 – 212354, 070 — 212383 [68430]

### ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். புதன்கிழமை 111/3, கோயில் வீதி. நல்லூர், ஞாயிறில் யில் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில்மடம் பொய்யாமொழி ஜோதிடம். (68431)

## G. A. Q, Ist In Com.

## யாழ். பேராதனைப் பல்கலைக்கழகம்

(வெளிவாரி)

★ A/L இல் 3 பாடங்களில் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்) சித்தியடைந்தவர்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

★ இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

★ விண்ணப்பப் படிவங்களையும் விவரங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விரிவுரைகள் ஆரம்பம்; 04 – 09 – 1999 (8 மணி)

விவரங்களுக்கு: S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ். (68451)

# அபிவிருத்திக்கு 42லட்சம் ரூபா; சாவகச்சேரி பி.சபை ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஓக. 25

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்திவேலைகளுக்கென 42 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்வதென கடந்த வாரம் நடைபெற்ற சாவகச்சேரி பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சபையின் தலைவர் அவரன் பொன்னையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்புக்களைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் சாவகச்சேரி நவீன சந்தை புனரமைப்புக்கு 30 லட்சம் ரூபாவும், சந்தைக் கடைகளுக்கு வர்ணம் பூசுவதற்கு 6 லட்சம் ரூபாவும், எழுதுமட்டுவாள் ஆயுர்வேத வைத்திய சாலைக் கட்டடத்துக்கு 4 லட்சம் ரூபாவும் மந்துவில், சரசாலை வீதிகளுக்கு தலா 1 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது

நிதிக்குழு, மராமத்துக் குழு போன்ற குழுக்களும் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டன. [ஐ-5]




## COMPUTER POINT

**(TRAINING DIVISION)**

REGD. No. J/DS/BR/63/97

No. 28, St. PATRICK'S ROAD, JAFFNA.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

**30-08-99** 10.00 A.M.
**04-09-99** 10.00 A.M. } S.L.T.

- ▶ BEGINNER'S COMPUTER STUDIES (PROGRAMMING IN BASIC LANGUAGE)
- ▶ DIPLOMA IN COMPUTER STUDIES
- ▶ CERTIFICATE COURSES

LECTURES BY: **MR S R.LOGENDRA** (D.C.A., SYSTEMS ANALYST, M.C.S. INDIA)

- ▶ G.C.E. O/L, G.C.E. A/L, பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிவோரின் நன்மை கருதி விசேட கணனி வகுப்புகள்.
- ▶ அனைத்து வகுப்புகளும் வார நாள்கள், சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறும்.
- ▶ புதிய பிரிவுகளில் INTERNET & E.MAIL அறிமுகப்படுத்தப்படும்.
- ▶ விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

— நிர்வாகி

[68452]

# தேசிய சேமிப்பு வங்கி யாழ். கிளையின்

# விசேட கருமபீடம்

## நல்லூர் கந்தசாமி கோயிலின்

பின்வீதியில் இயங்கும் எமது விசேட கருமபீடத்தில்

# ரிதீரேகா

சான்றிதழ்களைக் கொள்வனவு செய்பவர்களுக்கான பரிசு விவரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு: | ரூ. | 13,00,000 | (ரூ. பதின்மூன்று லட்சம்) பெறுமதியான மிற்சுபிஷி லான்சர் ஜி. எல். எக்ஸ் கார் |
| 2 ஆம் பரிசு: | ரூ. | 5,00,000 | பெறுமதியான டை ஹட்சு கியூறே கார் |
| 3 ஆம் பரிசு: | ரூ. | 50,000 | வீதம் இரண்டு பரிசுகள் |
| 4 ஆம் பரிசு: | ரூ. | 10,000 | வீதம் 20 பரிசுகள் |
| 5 ஆம் பரிசு: | ரூ. | 6,000 | பெறுமதியான 100 தங்கப்பவுண் |
| 6 ஆம் பரிசு: | ரூ. | 1,000 | வீதம் 300 பரிசுகள் |
| 7 ஆம் பரிசு: | ரூ. | 500 | வீதம் 600 பரிசுகள் |

இரண்டு மாதங்களுக்கொருமுறையாக இதுவரை நடைபெற்ற 13 சீட்டிழுப்புக்களில் எமது கிளையில் பரிசுகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை வருமாறு:

**1 ஆம் பரிசு – 01 (ஒருவர்)**
**4 ஆம் பரிசு – 07 பேர்**
**5 ஆம் பரிசு – 12 பேர்**
**6 ஆம் பரிசு – 54 பேர்**
**7 ஆம் பரிசு – 94 பேர்**

ரிதீரேகா சான்றிதழ்களை ரூ. 100, ரூ. 500, ரூ. 1,000 ஆகிய பெறுமதிகளில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ரூ. 10 க்கு ஓர் இலக்கம் என்ற அடிப்படையில் சீட்டிழுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும். உதாரணமாக நீங்கள் ரூ. 1,000 பெறுமதியான சான்றிதழைக் கொள்வனவு செய்தால் ஒவ்வொரு சீட்டிழுப்பிலும் 100 வெற்றிவாய்ப்புக்களைப் பெறுவீர்கள். அதேபோல், நீங்கள் ரூ. 5,000 பெறுமதியான சான்றிதழ்களைக் கொள்வனவு செய்தால் ஒவ்வொரு சீட்டிழுப்பிலும் 500 வெற்றிவாய்ப்புக்களைப் பெறுவீர்கள். எனவே கூடுதலான முதலீடுகளைச் செய்வது உங்கள் வெற்றி வாய்ப்பை உறுதிசெய்யும். வெற்றிவாய்ப்புக்கள் இல்லாது போனாலும் குறைந்தது ஒரு வருடத்தின்பின் உங்கள் ரிதீரேகா சான்றிதழ்களை 3% போனஸ் உடன் (வட்டியுடன்) பணமாக்க முடியும். பணமாக்கப்படாதசான்றிதழ்களின் இலக்கங்கள் தொடர்ந்தும் சீட்டிழுப்பில் சேர்த்துக்கொள்ளப்படும்.

சேமிக்கவும், பரிசுகளை வெல்லவும் வழிகாட்டும் அதிவிசேட சேமிப்புத்திட்டமான ரிதீரேகா சான்றிதழ்களை ஒவ்வொரு குடும்ப அங்கத்தவர் பெயரிலும் தவறாது கொள்வனவு செய்து உங்கள் வளமான எதிர்காலத்திற்கு வழிகோலுங்கள்.

ரிதீரேகாவில் நீங்கள் முதலீடு செய்யும் பணத்துக்கு அரசாங்கத்தின் 100% உத்தரவாதம் உண்டு என்பதை மறந்துவிடாதீர்கள்.

# தேசிய சேமிப்பு வங்கி

**(உங்கள் குடும்ப வங்கி)**

(சி/8623)

## யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற்கழகம்

# இசை நாடகப் பாடல்கள் ஒலியிழை வெளியீட்டு விழா

காலம்: 26 – 08 – 1999 வியாழக்கிழமை காலை 9.00 மணி

இடம்: கைலாசபதி கலையரங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தலைவர்: பேராசிரியர் அ. சண்முகதாஸ்

## நிகழ்வுகள்

- மங்கல விளக்கேற்றுதல்
- தமிழ் வாழ்த்து
- வரவேற்புரை
  திரு. கி. விசாகரூபன் (M. phil)
- வாழ்த்துரைகள்
  - ✱ பேராயர் அதி வண. கலாநிதி எஸ். ஜெபநேசன்
  - ✱ கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை
- தலைமையுரை
- வெளியீட்டுரை:
  கலாநிதி எஸ். சிவலிங்கராஜா
- ஒலியிழை வெளியீடு:
  - ✱ ஒலியிழையிலிருந்து
  - ✱ சிறப்பு ஒலியிழை வழங்கல்
- கலைஞர் கௌரவிப்பு:
  திரு. செ. மெற்றாஸ்மயில் B. A (Hons)
- நயப்புரை:
  சங்கீதபூசணம் திரு. சு. கணபதிப்பிள்ளை
- கலை நிகழ்வு:
  மூத்த இசைநாடகக் கலைஞர்களும், இளந் தலைமுறைக் கலைஞர்களும் இணைந்து வழங்கும் நாடக மேடைப் பாடல்கள்
- நன்றியுரை:
  திரு. பொ. அருந்தவநாதன் B. A (Hons)

(சி/8629)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் வடக்கு அன்னங்கை

# ஸ்ரீ மனோன்மணி அம்பிகா சமேத சிவபூதவராயர் ஆலய

# நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா

# மகா கும்பாபிஷேக சிறப்பிதழ்

**25—08—1999**

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி

கோண்டாவில் அன்னங்கைப் பதியுறை ஸ்ரீ மனோன்மணி அம்பிகா சமேத சிவபூதவ ராயர் சுவாமிக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது மனதுக்கு நிறைவைத் தருகின்றது. மனித வாழ்வின் உயர் நிலைக்கு அழைத்துச் செல்வது தெய்வ வழிபாடு. எங்கும் எதிலும் உறைந்திருக்கும் இறைவனை உருவம் கொடுத்து வழிபடுவது ஆன்ம ஈடேற்றத் திற்கு இன்றியமையாததாகும்.

மக்கள் யாவரும் சைவ அனுட்டானத் துடனும் தருமசிந்தனையுடனும்வாழ இக் கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கும் சிவாசாரி யர்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக் கும் கோண்டாவில் வாழ் சைவ மக்களுக்கும் இறைவனது திருவருள் கிடைக்கப் பிரார்த்திக் கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## தேவஸ்தானக் குருக்களின் ஆசியுரை

அன்னங்கைப் பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்து வரும் மனோன்மணி அம்பிகை சமேத சிவபூதவ ராயப் பெருமானுக்கு இன்று மகாகும்பாபி ஷேகம் நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

உயிர்களிடத்திலே பேரன்பு கொண்ட இறைவன் அவர்களுக்கு அருள் புரியும் வண் ணம் பல மூர்த்தங்கள் மூலம் ஆலயங்களிலே அருள் புரிந்து வருகிறான் அதற்கமைய எமது ஆலயத்திலே சிவனின் அம்சமான சிவ பூதவராயர் என்னும் திரு நாமம் கொண்டு எழுந்தருளி ''வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்'' என்னும் முதுமொழிக் கமைய அருள்பாலித்து வருகிறார்.

இக்கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ கிரி யைகளை நடத்திய குருமார்கள், உதவியா ளர்கள் அனைவருக்கும் எம்பெருமான் சிவ பூதவராயப் பெருமான் சகல கடாக்ஷங்களை யும் அருளவேண்டும் என்று அவரது பாதார விந்தங்களை வணங்கி ஆசி கூறுகின்றேன்

''ஸர்வே ஜனாகா ஸுகினோ பவந்து''

''கிரியாஜோதி''
சிவஸ்ரீ ஞானசம்பந்த ஜோதிநாதக் குருக்கள்
சிவபூதவராயர் தேவஸ்தானம்.

## பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசிச்செய்தி

ஈழமணித் திருநாட்டிலே கோண்டாவி லில் அன்னங்கைப்பதி வீற்றிருந்து, பக்தர் களுக்கு வேண்டுவன ஈர்ந்தருளும் கருணைநிதி யாம் மனோன்மணி உடனுறை சிவபூதராஜப் பெருமானுக்கும், விநாயகர், நடராயர், ஐயனார், தக்ஷணாமூர்த்தி, சுப்ரமணியர், வைரவர் முதலானோருக்கும் இன்று மகா கும்பாபிஷேகம் நிகழ்த்துவதில் பெரும்பேற டைகின்றோம்.

பிறவிகளுள் சிறந்தது மானிடம் எனவே இவர்கள் பதிபுண்யம் பசுபுண்யம் செய்ய வேண்டியவர்கள்- இதற்கேற்ப இவ்வூர் மக் களின் பக்திச் சிந்தனையின் பெறுபேறு இத் திருக்கோயில் முன்பிருந்த நிலையிலும் பார்க்க இன்று கலையழகு பொருந்தியதாக அம்பிகை, நடராஜர், ஐயனார் போன்ற நாதனமூர்த்திகளுக்கும் புதுக்கோயில்கள் அமைக்கப்பெற்று இன்று நிகழ்கின்ற கும் பாபிஷேகக் காட்சியைத் தரிசித்தும், வழி படுகின்ற பக்தகோடிகள் திருவருளுக்கும், குருவருளுக்கும் பாத்திரராகி பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வார்கள் என ஆசி கூறு கிறேன்.

ஸர்வே ஜனா ஸுகினோபவந்து:

பிரம்மஸ்ரீ அ. நா. சோமாஸ்கந்த
சிவாச்சாரியார்

## அருள்மிகு சிவபூதவராயர் ஆலய வரலாறு

இந்து மா கடலின் முத்து என விளங்கும் இலங்கைத் தீவின் வடபால் யாழ்ப்பாணத்தின் கண் அமைந்துள்ளகோண் டாவிலில் அன்னங்கைப்பதியில் வீற்றிருந்து வேண்டுவார்க்கு வேண்டும் வரமீந்து அருள் பாலித்து எம்பதி அடியார்களைச் சிவ நம்பிக்கையில் ஆழ்த்தியிருக்கும் சிவபூதவராயர் இன்று மனோன்மணி சமேதராக அமையப்பெற்று மகாகும்பாபி ஷேகம் நடைபெறுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ் விக்கிரகத்தை சிவகணங்களின் தலைவனும் சைவ மக்களின் முழுமுதற் கடவுளுமாகிய சிவனைக் குறிப்பதாக சிவபூதவராயர் எனப் பெயர் சூட்டி வழி படலாயினர். வெண் தாடி, வெண் தலையுடன் வெண்பட்டாடை உடுத்தி கையிலே பிரம்புடன் காட்சிகொடுத்ததாக அடியார்கள் கூறுகின்றார் கள்.

இவ்வாறு வழிபட்டு வரும் நாளில் அங்கே ஒருவில்வ விருட்சம் தானாகத் தோன்றி வளர்ந்ததும் இன்று அது தல விருட்சமாகக் காட்சி கொடுப்பதும் ஆலயத்தின் சிறப்பைக் காட்டுகின்றது. நாளடைவில் ஆலயம்வளர்ச்சி பெற்றுமூலஸ் தானமும் ஒரு மண்டபமும் கல்லால் அமைக்கப்பட்டது.

திருவாளர் அப்பாக்குட்டி அவர்களின் மூதாதையர் அவர்களால் கண்டெடுக்கப்பட்ட சூலம்தான் எம் பெரு மானின் ஆரம்பம்—இவர் இதைத் தமது வளவின் வடக்குப் பக்கத்தில் ஒரு பூவரசு மர நிழலின் கீழ்வைத்து வழிபட்டு வந் தார். இதன் மகிமையை உணர்ந்த ஊர்மக்களும் நம்பிக்கை வைத்து வழிபடத் தொடங்கினர். எல்லாரும் சேர்ந்து சூலத் தின் பக்கத்தில் ஒரு விக்கிரகம் அமைத்து சிறு கோயிலாக்கி வழிபட்டு வந்தனர். இவ்வாறு ஆரமபிக்கப்பட்ட காலம் கர்ணபரம்பரைக் கதைகள் மூலம் கி.பி. 1896 ஆம் ஆண் டாகும்.

ஊர் மக்களின் ஆதரவைப் பெற்ற சி. கார்த்திகேசு என்பவர் ஓர் அறங்காவலர் சபையை அமைத்து ஆல யத்தைப்பேணி வந்தார். ஆலயத்தின் வளர்ச்சிக்காக ஊர் மக்களின் வருமானத்தின் ஒரு பகுதி கொடுத்து உதவப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தொடர் வளர்ச்சி யில் ஏனைய மண்டபங்களும் வசந்த மண்டபமும் அமைக்கப்பட்டன. இடையில் பரிபாலனம் ஊர்மக் களின் கைக்கு மாறியதாகக் கூறப்படுகின்றது. இக் காலப் பகுதியில்தான் எம்மூர் இளைஞர்களும், கோயில் ஐயாவும் சேர்ந்து கோயிலைப் புனரமைத்துக் கும்பாபிஷேகமும் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின் றது

இது 1974 ஆம் ஆண்டு நடைபெற்றமையால் இன்று 25 வருடங்கள் பூர்த்தியடைந்தமை குறிப்பிடத் தக்கது. கோயில்ப் பூசை மூன்று காலமாகி அலங்கார உற்சவமும் நடைபெற்று வந்தது. பின் 1976 ஆம் ஆண் டில் இருந்து ஒவ்வொரு வருடமும் ஆனி உத்தர நாளை

[8 ஆம் பக்கம் பார்க்க]

## தரணியெலாம் நலம் சிறக்க வாழி வாழி!

திருவளரும் கோண்டாவில் வடக்கில் மேவும்
சிவபூத ராயன் வாழ் தேவக் கோயில்
வரன் முறையில் புதுக்கோலம் பெற அமைத்து
வருடம்பிர மாதிஆ வணி முதல் நாள்
பெருமகா கும்பாபி ஷேக மாற்றிப்
பெருமானைக் கண்குளிரக் காணும் அன்பர்
தருமநெறி, பல்லாண்டு சிவம் பெருக்கி
தரணியெலாம் நலம் சிறக்க வாழிவாழி!

அருள்மனோன் மணித்தாயை அருகில் தாங்கும்
அரன் பூ தவராயனின் அன்புத் தொண்டர்
கருணைமிகு பணிவாழி அடியார் கூட்டம்
கற்பகத்தின் பயன்கொண்டு மகிழ்ந்து வாழி
தெருணிறைந்த சிற்பங்கள் செழித்த கோயில்
சிருட்டித்த கலைவல்லோர் வாழி, நித்தம்
பரவிடும்அந் தணர்வாழி பொருள் நயந்த
பக்தரெலாம் சுகம் சிறந்து வாழிவாழி!

— அருட்கவி சீ. விநாசித்தம்பி

## குடமுழுக்கு ஆட வாரீர்!

பக்திக்கு உருகிடும் பரம சிவன்
பதியாம்கோண் டாவில்அன்னங் கைத்த லத்தில்
சித்திநிறை மனோன்மணித் தாயாரே! நாதனாம்
சிவபூத ராயரே! நடேச ரொடு
சக்தியாம் சிவகாமி ஐய னாரே!
சண்முகன் கணபதியே! குடமு ழுக்கு
முத்திசேர் பக்தருக்கு அருளும் பூத்து
முகிழ்ந்திடக் குடமுழுக்கு ஆட வாரீர்!

மஹாவித்துவான்
பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர்

## துர்க்கா துரந்தரி வாழ்த்துரை

கோண்டாவில் அன்னங்கைப் பதியில் எழுந்தருளி அருள் புரியும் சிவபூதவராயப் பெருமான் மனோன்மணி அம்பிகை சமேத ராகக் காட்சி தருகிறார். ஆவணி மாத திருவோண நட்சத்திரத்தில் நிகழும் குட முழுக்குவிழாவுக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சிவனுடைய அம்சமாக விளங்குபவர் சிவபூதவராயப் பெருமான். கோண்டாவில் பதிவாழ் மக்களுக்கு நல்லருள் பாலித்து வாழ வைக்கின்ற சிவபூதவராயருக்கு அவ் வூர் மக்களின் ஆதரவினாலும் அந்தணப் பெருமக்களின் வழிகாட்டலினாலும் இவ் விழா நடைபெறுவது வரவேற்கத்தக்கது.

அடியார்களின் தரிசனத்துக்கு மிகவும் இன்றியமையாத நிகழ்வாகிய கும்பாபிஷேக அருட்காட்சியைத் தரிசித்து அனைவரும் திரு வருட்பேறு பெற்று உய்வார்களாக.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

## இந்து நாகரிகத் துறைத் தலைவரின் ஆசியுரை

யாழ்ப்பாணத்தில் மக்களது ஆன்மீக வாழ்வை மேம்படுத்துவதில் திருக்கோயில் கள் காலங்காலமாக உதவி வருகின்றன. அவ் வரிசையில் அருமை பெருமையாகப் பேசக் கூடியவாறு விளங்குவது கோண்டாவில் அன் னங்கைப் பதியுறைஸ்ரீ மனோன்மணி அம்பிகா சமேத சிவபூதவராயர் ஆலயமாகும். எம் பெருமானின் திருவருளால் இவ்வாலயத் திருப்பணிகள் நிறைவேறி ஆவணி மாதம் 8 ஆம் நாள் 25-08-1999 இன்று புதன்கிழமை கோதூளி முகூர்த்த வேளையில் நவகுண்ட பட்ச புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் பிரம்மஸ்ரீ அ. நா. சோமஸ்கந்தக் குருக்கள் தலைமையில் ஆற்றல்மிகு சிவாச்சாரியர் களின் புனித அனுசரணையுடன் நிகழ்வது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

எமது நல் ஆசிகள்,

பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர்
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## மலேசியக் குருக்கள் ஆசியுரை

சுவர்ண பூமியென வியந்து கூறப்படும் இலங்காபுரியின் வடபால் யாழ். நகரின் கண் அமைந்து இருக்கும் கோண்டாவில் பதி யுறை அன்னங்கை ஸ்ரீமனோன்மணி சமேத சிவபூதவராயர் தேவஸ்தான மஹா கும்பா பிஷேகக் குடமுழுக்குப் பெருவிழா இனிது நிறைவேற எனது மனமார்ந்த நல்ஆசிகள்.

இந்த ஆலயத்தை ஆகம முறைப்படி அமைத்து நன்கு திருபபணிகளை நிறைவு செய்து தினமும் இறைவனைத் தொழுது பேரானந்தம் பெற்று குடமுழுக்கு விழா, நல்விழாப் பொலிவு கண்டு பேரானந்தம் அடைவோமாக.

பிரம்மஸ்ரீ அ. நா. சுப்பிரமணியக் குருக்கள்
மலேசியா பெட்டாலிங்
ஜய சித்தி விநாயகர் கோயில் பிரதமகுரு

## வியாகரணசிரோமணியின் ஆசிச்செய்தி

கோண்டாவில் என்னும் பதியிலே அன்னங்கை என்னும் பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி அருள்மழை பொழிந்து வரும் சிவபூதவராயப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் என்னும் குடமுழுக்கு பெருஞ் சாந்திவிழா நிகழ்வதனையறிந்து பெருமகிழ் வெய்துகின்றோம்.

கும்பாபிஷேகம் சிறப்பாக நிகழ தக்க வழிமுறைகளைக் கூறி வழி நடத்தும் ஆலய குரு, உதவியாளர்கள் ஸ்தபதிகள், ஆலய அறங்காவலர்கள், பொருளுதவி, சரீர உதவி செய்தவர்கள் பூரணமான ஆனந்தமான வாழ்வு பெறுவார்களாக.

''லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகிநோ பவந்து'

வியாகரண சிரோமணி
பூரண. தியாகராஜக் குருக்கள் (B.A. Hons.Cey)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈவினை மத்தி

# அருள்மிகு ஸ்ரீ கற்பகவிநாயகர் திருக்கோயில்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ

# மஹா கும்பாபிஷேகசிறப்புமலர்

25 - 08 - 1999

## பிரதிஷ்டா பிரதமகுரு அருளாசி

ஈவினை மத்தியில் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகம் நிறைவுறுவது கிராமத்தவர்க்கு வாழ்வில் ஒரு பொன்னாளாகும்.

அதுவும் ஒரே வருடத்தில் பாரிய திருப்பணிகள் நிறைவுற்று நடைபெறுவது விவசாயத்தையே நம்பி வாழும் மக்களின் பகீரதப்பிரயத்தனம் என்றே சொல்ல வேண்டும்.

இக்கைங்கரியம் நடைபெற — முக்கியமாக அல்லும் பகலும் பொருளாளர் செ. ஞானச்சந்திரன், தலைவர் செ. இரத்தினலிங்கம், சிற்பவல்லுனர் கந்த தியாகராஜா ஆகியோர் முன்னின்று உழைத்துள்ளனர். கால சந்தர்ப்பத்தில் — வெளிநாட்டில் வாழும் ஊரவர்கள் செய்த பொருள் பணஉதவியை என்றும் மறக்க முடியாது இவர்கள் யாபேருக்கும் — ஊர் மக்கள், நாட்டு மக்கள் இன்றைய நன்னாளில் சகல ஐஸ்வரியமும் பெற்று வாழ விநாயகனை திரிகரண சுத்தியுடன் பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ – தியாக கெங்காதரக் குருக்கள்
கற்பகவிநாயகர் தேவஸ்தானம்.

## தர்ம சாஸ்தா குருகுல அதிபர் அருளாசி

கும்பாபிஷேகக் கிரியைகளில் மிக முக்கியமான இடத்தை வகிப்பது ஆசார்ய சிரேஷ்டர்களின் சிவோஹம்பாவனையாகும். அத்தர் பூஜையின் பலம்தான் பகிர் பூஜையில் பலன் தருகிறது. சிவனை மனத்திலே அர்ச்சித்து நாபியில் ஹோமம் செய்து புருவ மத்தியில் அவரை நிறுத்தி தியானித்து அச் சிவத்தோடு ஒன்றுபட்டு தான் வேறு சிவன்வேறு என்றில்லாமல் ஆத்ம சிவ ஐக்யமே சிவோஹம்பாவனையாகும். சிவாசார்யர்கள் வரிசையாக அமர்ந்திருந்து அர்க்யதானஞ் செய்து இருதய கமலத்தில் சிவனை ஆராதிப்பது கும்பாபிஷேகக் கிரியைகளில் உயர்வானதாகும். இத்துணைப்பெருமை வாய்ந்த இக்கிரியை மூலம் பிம்ப சான்னியத்தை ஏற்படுத்தி பக்தர்களுக்கு திருவருட் பிரசாதத்தை அளிக்கிறார்கள். இப்படியான பல கிரியைகள் ஆவணி 8ஆம்நாள் நடைபெற்றுபுனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெறும் ஈவினை கற்பக விநாயகர் திருவருள் அக்கிராம மக்கள் எல்லோருக்கும் நலன் தரப்பிரார்த்திக்கிறேன்.

தா. மகாதேவக்குருக்கள்

## பொருளாளர் செய்தி

மண்வளம் நிறைந்த விவசாயபூமி எங்கள் கிராமம். சிறிய ஊராக இருந்தாலும் விவசாயத்திலும், கல்விகலைஞான மேம்பாட்டிலும் விளையாட்டுத் துறையிலும் தனக்கென ஒரு தனிப் பெருமையைக் கொண்டு விளங்குகின்றது. இத்தகைய வளர்ச்சிக்கும் பெருமைக்கும் காரணம் பரிபூரணனான எம்குலதெய்வம் கற்பகவிநாயகனின் கடாட்சமேயன்றி வேறொன்றில்லை.

அழகிய தோற்றமும் பொலிவும் பெற்றுள்ள இம்மண்டபங்களை, அமைப்பதற்கு எமது பரி

(7 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி

ஈவினை என்னும் பகுதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் கற்பக விநாயகருக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மன மகிழ்ச்சி அடைகின்றோம். பழமையும் பெருமையும் வாய்ந்த ஈவினை கற்றவர்களையும் ஒழுக்கத்தைக் கொண்டவர்களையும் தன்னகத்தே கொண்ட பகுதியாகும். இங்கு தெய்வ கும்பாபிஷேகம் சைவமக்களுக்கு நடைபெறும் சாந்தியைத் தரக்கூடியதாகும். விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமானுக்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் ஆலயத்திற்கும் ஊர்மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும்.

மனித வாழ்வில் தெய்வ வழிபாடு மனிதனைச் சிந்திக்கவும் செயற்படவும் மனிதநேயத்தோடு வாழவும் வழி சமைக்கின்றது.

மனிதனாக பிறந்துள்ள ஒவ்வொரு மனிதனும் தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவதற்காகவே ஆலயங்களில் விழாக்கள் நடைபெறுகின்றன. இவ்விழாக்களில் கும்பாபிஷேகம் தரிசிப்பது புண்ணியப் பேற்றைத் தருவதாகும். மக்கள் யாவரும் தருமசிந்தையோடும் தெய்வ நம்பிக்கையோடும் வாழ்வதற்கு மகா கும்பாபிஷேகத்தை நடத்திவைக்கும் சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் ஆலயபரிபாலன சபையினருக்கும் ஈவினை வாழ்மக்களுக்கும் கற்பகவிநாயகர் நல்லருள்புரிய வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

இரண்டாது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்

## செயலாளரின் செய்தி

நீர் வளமும் நிலவளமும் ஒருங்கமைந்த ஈவினையில் அருளாட்சி புரியும் கற்பக விநாயகர் கோயில் குட முழுக்கு விழா ஆவணித் திங்கள் 8 ஆம் நாள் (25-08-99) நடைபெறுவதானது எமது உள்ளங்களை எல்லாம் உவகைப் பெருங் கடலுள் ஆழ்த்தி நிற்கின்றது.

எமது உயிருக்கு உறுதுணை பயக்க எம்மை எல்லாம் ஒன்றிணைத்து இந்த அரிய பெரிய செயலைச் செய்திட்டது கற்பக விநாயகர் திருவிளையாட்டேயன்றி வேறொன்றுமல்ல.

இத் திருப்பணியில் பங்களிப்புச் செய்திட்ட எல்லோருக்கும் அவன் உள் நின்று உதவுவான் என்பதற்கு ஐயமில்லை. அவன் திருவருள் துணை நிற்க பிரதமகுருவானவருக்கும் பண உதவி பொருள் உதவி புரிந்தவர்களுக்கும் சிற்பாசாரியர்களுக்கும் ஓவியர்களுக்கும் தொண்டர்களுக்கும், மற்றும் உள்ளோர்க்கும் எனது நன்றியையும் வாழ்த்தையும் கற்பக விநாயகர் சைவ பரிபாலன சபையின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ. அரசரத்தினம்
செயலாளர்

## தேவஸ்தான தலைவர் வாழ்த்து

ஆண்டுகள் பல கடந்த பின் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பெற்று எமது ஆலயமும் இன்று கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளமை ஊருக்குக் கிடைத்த பெருநன்மையே ஆகும். ''அவன்தாள் வணங்கவும் அவனருளே வேண்டும்'' என்பதற்கமையக் கோயிச திருப்பணிகளைச் செய்வதற்கும் அதனைச் சிறப்பாக நெறிப்படுத்தி முடிப்பதற்கும் இறையருள் இன்றியமையாது வேண்டும். அத்தகைய பெரும் பாக்கியத்தை எமது பரிபாலன சபைக்கு ஈந்தமையைச் சிரமேற் கொண்டு மண்டபங்கள் அமைக்கும் பணியை மேற்கொண்டோம். கற்பகமாய் அருள் சுரக்கும் எங்கள் ஐங்கரன் மிகக் குறுகிய காலத்துள் இப் பாரிய திருப்பணியை நிறைவுறச் செய்தமை அவனது பேரருளுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

இன்னும் மேற்கொள்ள வேண்டிய திருப்பணிகள் பலவுள. இவை யாவும் மிக விரைவில் நிறை வெய்த எல்லாம் வல்ல எம் பெருமான் அருள் புரிவாராக! இவைகளும் நிறைவுறும் நாள் வெகுதூரத்திலில்லை.

''மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்''

செ. இரத்தினசிங்கம்
தலைவர்
பரிபாலனசபை,
கற்பக விநாயகர் தேவஸ்தானம்.

## சிற்பக் கலைஞரின் வாழ்த்து

ஆழி சூழ் தீவின் அழகான வடபுலத்திலே மேழிபிடித்து மேன்மையுறும் சிற்றூராம் ஈவினையில் அமைந்துள்ள திருத்தலமே கற்பகவிநாயகர் ஆலயம். விநாயகனின் திருவருள் பொழிவதனால் வளமான மண்ணுக்கு மகிமையாகத் திருவும் பொலிவும் கேடில்லாச் செல்வமான கல்வியும் நிறைந்துள்ளது. விவசாயக் கிராமமானாலும் படித்துப் பாண்டித்தியம் பெற்றுயர் பல் தொழில் வல்லுநரும் இங்கு வாழ்வது இக்கிராமத்துக்குக் கிடைத்த பெருமதிப்பாகும்.

கோயிலும் கோகரணமும் ஓர் ஊரின் உயர்ச்சிக்கு வழிகோலும் என்பதாலும் ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற முதுமொழிக்கு இணங்கவும் நம் மூதாதையர் ஆலயங்களை அமைத்தனர்; போற்றினர், வழிபட்டனர், வளர்த்தனர். அத்தகைய பெரு

(7 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபரின் வாழ்த்து

பாரெல்லாம் புகழ்பரப்பும் பரம்பொருள் கற்பக விநாயகப் பெருமானின் பூரண கும்பாபிஷேக விஞ்ஞாபனத்தை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றோம். ஈவினைப் பகுதியில் இனிதிருந்து அடியார்களுக்கு இன்னருள் பாலிக்கும் அவன் புகழ் பேசி முடியாது. அல்லலின்றி அருவினை தானுமின்றி அடியவர்கள் தத்தம் கடமைகளைச் செய்து வருகின்றனர். ''உண்டி கொடுத்து உயிர்வளர்க்கும்'' ஈகைப் பண்புடையவர்களே ஈவினை ஸ்ரீகற்பக விநாயகரின் அடியவர்கள்.

விநாயகப் பெருமானின் தலைமையில்,

(7 ஆம் பக்கம் பார்க்க)


வாழ்த்துவோர்:

இளவரசி பட்டுச்சோலை
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சிறிகணன் புடைவையகம்
இணுவில்.

ஸ்ரீரங்கன் ரெக்ஸ்
திருநெல்வேலி.

அம்பாள் கிறீம் ஹவுஸ்
முத்திரைச் சந்தி,
நல்லூர்.

ஆ. இ[illegible]சையா அன் சன்ஸ்
209, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

மாருதி ரெக்ஸ்
1, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

அருள் விநாயகர்
மோட்டோஸ்
103, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குளோக் சென்ரர்
யுபிலி பசார், யாழ்ப்பாணம்.

ஜெய மங்களாஸ்
சுன்னாகம்.

சுந்தர் சண் எலக்றிக்கல்ஸ்
மானிப்பாய்.

E. S. பேரம்பலம்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
விரிவுரையாளர்
பலாலி ஆசிரியர் கலாசாலை.

திரு. க. தனபாலசிங்கம்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம்.

ஈவினை மத்தி
கற்பக விநாயகர்
சனசமூக நிலையம்

நியூ செலக்சன் சென்ரர்
இல. 64, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

ஓட்டோ சப்ளை
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

றஞ்சனா
சுன்னாகம்.

சோதி ரெக்ஸ் ரைலஸ்
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சிற்றி ரெக்ஸ்
256, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

சுன்னாகம்
ப. நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.

திரு. தி. மா. செல்வராசா
J. P. U. M.
(அத்தியார்),
[illegible] தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

நவம் ரெக்ஸ்
இல 10, யுபிலி பசார்,
யாழ்ப்பாணம்.

ஐங்கரன் புடைவையகம்
கோண்டாவில்.

சீமாட்டி புடைவையகம்
நெல்லியடி.

லிங்கம் சில்க் ஹவுஸ்
18, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

மகா சில்க்ஸ்
32, 40A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

குகன் ஸ்ரோர்ஸ்
குகன் கொமினிக்கேசன்
180, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

துவாரகாஸ்
மின்சார உபகரண
விற்பனை நிலையம்
22, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம்கோண், ரொபி வகைகள், ஐஸ்பழ தயாரிப்புக்குரிய குச்சி வகைகள், வெங்காயம் பொதி செய்யும் நெற்பேக்குகள், ஸ்ரிக்கர் படங்கள், தவிடு, தேங்காய்ப்பிண்ணாக்கு, தரமான தேயிலை வகைகள், சோளன், கச்சான், தொலைபேசிவகைகள், கால்மிதிகள் என்பனவற்றை மொத்தமாக மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நாதன் களஞ்சியம்,
213C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T. P 2916 [68450]


## கூட்டுறவுப் பயிற்சி தொடர்பான அறிவித்தல்
## விசேட இறுதிப் பரீட்சை

1995 ஆம் ஆண்டும் அதற்கு முன்னும் கூட்டுறவு தராதரப் பத்திர சாதாரண, உயர்பிரிவு பயிற்சி நெறியில் பயின்று இறுதிப் பரீட்சையை பூர்த்தி செய்யாதவர்களுக்கான விசேட இறுதிப் பரீட்சை ஒன்று இந்த ஆண்டு ஐப்பசி மாதம் நடைபெற உள்ளது. இதில் தோற்ற விரும்புவோர் 05 – 09 – 1999–க்கு முன்னர் யாழ். கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி அதிபருக்கு பூரண விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

மாவட்டச் செயலாளர்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி/8617)

## நீங்கா நினைவில் 7-ம் ஆண்டு



அமரர்
### இராசையா நவரட்ணம்
(ஆசிரியர் யா/ மானிப்பாய் மெமோறியல் கல்லூரி)
திதி: 25 – 08 – 1999

சந்நிதியான் அருளால்
ஆத்மா அமைதியுறப் பிரார்த்தித்து நிற்கும்


மனைவி N. இந்திராணி,
மக்கள் N. நரேந்திரன்,
N. இந்துஷா.

நவாலி வடக்கு,
மானிப்பாய். (68408)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
27 – 11 – 1954

மறைவு:
25 – 08 – 1997



அமரர் **அருள்திரு இ. அருள்பாலன்**
[ தென் இந்திய திருச்சபை ஊழியன் ]

ஆண்டுகள் இரண்டென்ன ஆயிரம் தான் ஆனாலும்
உம் நினைவு என்னை விட்டு அகலாது.

பிரிவால் துயருறும்
மனைவி

இராமலிங்கம் வீதி,
உடுவில். [68445[

## ஈவினைமத்தி அருள்மிகு ஸ்ரீ கற்பகவிநாயகர் திருக்கோயில்
# மஹா கும்பாபிஷேக சிறப்புமலர்

(6 ஆம்பக்கத் தொடர்)

### சிற்பக்கலை...

நோக்கினால் அன்று உருவான இந்த ஆலயம் தனக்கென ஒரு தல வரலாறு கொண்ட சிறப்பினை உடையது.

''இவன் முடிக்கும்'' என்ற நம்பிக்கையைச் சிந்தையுள் வைத்து என்னை இந்த ஊருக்கு அறிமுகப்படுத்தி இப்பெரும் திருப்பணியை என்னிடத்தில் ஒப்படைத்து மேற்கொள்ள வைத்த பெருமை ஆலய பரிபாலன சபைத் தலைவர் உயர்திரு. செல்லத்துரை இரத்தினசிங்கத்தையே சாரும். அத்தோடு பொருளாளரும் பிரதி அதிபருமான திரு. செ. ஞானச்சந்திரன் அவர்களும் பரிபாலனசபையினரும் ஆக்கத்துக்கு ஆற்றிய பணி மறக்கற்பாலது.

ஊக்கத்தோடு வழிகாட்டலும் தந்து கீர்த்தி பெறும் வண்ணம் இத்தொண்டினை முடிவுறச் செய்யஉதவியஆலயக்குருக்கள் பிரம்மஸ்ரீகெங்காதரக் குருக்கள் என்றும் போற்றத் தகுந்தவர்.

இந்த ஆலயத்தில்மேற்கொள்ளவேண்டிம் திருப்பணிகள் இன்னும் பலவுள. இவைகளுய காலக்கிரமத்தில்கைகூடிஆலயமும் இந்தஊரும் மக்களும் மேன்மேலும் முன்னேற எல்லாம் வல்லஈவினை விநாயகனின் பாதக்கமலத்தைப் பணிகின்றேன்.

''எங்கும் திருவருள் பொலிக''

— கந்த. தியாகராசா
சிற்பக் கட்டடக் கலைஞர்

### பொருளாளர்...

பாலன சபையினருக்கு வாய்ப்புக் கிடைத்தது பெரும்பேறே. இத்தகைய கைங்கரியத்தை நிறைவேற்ற நின்றுழைத்து உதவிய சகலருக்கும் இல்லையெனாது நிதியளித்துதவிய கிராமத்தவர்களுக்கும் கோயிலையும் கொலுவிருக்கும் விநாயகனையும் மறவாது கடல் கடந்து வசிக்கும் எமது ஊர் அபிமானிகளுக்கும் கற்பக விநாயகனின் கிருபை என்றென்றும் கிடைத்து சகல நலமும் பெற்று வாழப் பிரார்த்திக்கிறேன்.

''அன்பர் பணிசெய்ய வென்னை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே''

செ, ஞானச்சந்திரன் (பிரதி அதிபர்)
பொருளாளர்,
கற்பகவிநாயகர் தேவஸ்தானம்.

### அதிபரின்...

தம்மை ஒரு கருவியாகப் பயன்படுத்தி பணி செய்யும் தேவஸ்தான சபையினர் பாராட்டுக்குரியவர்கள். கும்பாபிஷேகத்தை வெகுசிறப்பாகநடத்தும் சிவாச்சாரியார்கள் வணக்கத்திற்குரியவர்கள். மெய்யடியார்களே, பூரணமான கும்பாபிஷேகம் நிகழ்கின்றஇப்புண்ணிய நாளிலே கற்பகவிநாயகரின் பாதங்களைப் பணிந்து, இஷ்ட சித்திகளைப் பெற்றுவாழ்வீர்களாக.

எம்மக்களின் துன்பங்கள்தொடர்கதையாகத்தொடர்ந்து கொண்டிருக்கும்இந்நிலையில் 'வினை தீர்க்கும்விநாயகப் பெருமான்எம் துன்பத்தைத் துடைத்து, மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்த வாழ்க்கையை அருளுவான்என்றஎண்ணத்தோடு பிரார்த்தித்திருப்போம் ஈவினை ஸ்ரீ கற்பகவிநாயகர் அருள் எல்லோருக்கும் கிடைப்பதாக,

''மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்''

திரு. த. சற்குணசர்மா
(அதிபர், யா/மயிலணி சைவமகா வித்தியாலயம்)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக. 25

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள செஞ்சிலுவைச்சர்வதேச குழுவின்பிரதிநிதிகளுக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்குமான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தோற்றம், அதன் வளர்ச்சி மேற்கொள்ளும் பணிகள், கொள்கைகள் எதிர்காலதிட்டங்கள் பற்றிய விளக்கங்களும் இது தொடர்பான வீடியோ படக்காட்சியும் இடம்பெறும்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வேலைகள் தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப்பிரதிநிதி பெரிபிராண்ட் தலைமையிலான குழு பதிலளிக்கும்.

(இ–ரி)

## உதைபந்தாட்டம்

குருநகர், ஒக. 25

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'தூய ஒளி' வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் இன்று சென். றோக்ஸ் வி. க. அணியை எதிர்த்து சென். நீக்கலஸ் வி. க. அணி மோதவுள்ளது.

(க–51)

## ஆத்மஜோதியின் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஒக. 25

ஆத்மஜோதி நா. முத்தையாவின் நான்காவது நினைவு தினம் இன்று புதன்கிழமை கைதடி இந்துசமயப் பேரவையின் சைவ சிறுவர் இல்லத்தில் பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளது.

இதேவேளை — செப்டெம்பர் 11 ஆம் திகதி நா. முத்தையாவின் நினைவுச் சொற்பொழிவு ஏழாலை மகா வித்தியாலயத்தில் இடம்பெற [illegible] நிகழ்வும் அங்கு இடம் பெறும்.

(ஐ–ரி)


## இலவச மருத்துவ முகாம்

இடம்: நாவாந்துறை புனித மரியாள் தேவாலயம்

காலம்: 26-08-1999 வியாழன் காலை 8.30

பரிசோதனை: கண், நீரிழிவு, இரத்த அழுத்தம், புற்று மற்றும் பொது மருத்துவம் இலவச மருந்தும் வழங்கப்படும்

திருணமப் பதிவு: திருமணப் பதிவு மேற்கொள்ளாத தம்பதியருக்கான திருமணப்பதிவும் மேற்கொள்ளப்படும்.

பதிவு: மேற்படி சேவைகளைப்பெற விரும்புவோர் தேவாலய அருட் சகோதரியிடம் தமது பெயர்களைப் பதிவு செய்யவும்.

தலைவர்,
யாழ். லயன்ஸ் கழகம்

(சி/ 8636)


## 31 ஆம் நாள் நினைவுகள்

மலர்வு
26
—
07
—
1930



உதிர்வு
25
—
07
—
1999

அமரர் **வல்லி. பொன்னுத்துரை**

எங்கள் இல்லத் தீபமே!
எங்கள் இல்லச் சுடரே!
உமை நாம் இழந்து
உள்ளம் வாடுதையா!
கனவில் நீ வாழும்
உங்கள் நினைவுகள்
எமை விட்டு அகலாது!

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

109/2, பருத்தித்துறை வீதி,
அரசடி, நல்லூர். (சி/8625)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

கோப்பாய்
(தொடர்ச்சி)

எஸ். ஐயாத்துரை (109680 ஏ), கே. சொர்ணலிங்கம் (109681ஏ), எஸ். தேவராஜா (109683ஏ), எம். மனோறஞ் சினி (109688ஏ), ரி. பாமினி (109691ஏ), பி. சுதர்சன் (109695ஏ), ரி. மகேஸ்வரி (109735ஏ), ரி. நடராஜா (109739ஏ)

ஐ. இராமச்சந்திரன் (109742ஏ), ஜே. இராமச்சந் திரன்(109742பி), எஸ். ராஜ துரை (109744ஏ), எஸ். மகேந்திரன் (106745ஏ), கே. சச்சிதானந்தன் (109746ஏ), எம். ஆர். எம். ஸ்ரெல்லா (109769ஏ), கே. வேலாயுதர் (109769ஏ), ஐ. வேலாயுதர் (109769பி), எம். எம். சின்ன ராஜா(109778ஏ), எஸ். சித்ர தேவி (109778பி).

எம். லஷ்சுமி (109781ஏ), கே. விக்னேஸ்வரன் (109783ஏ), வி. றதீபா (109783பி), வி. கோபிகா (109783சி), வி. தர்சனா (109783டி), ஈ. ரட்ணம் (109783ஈ), பி. பரிபூரணம் (109786ஏ), பி. திலகராஜா (109787ஏ), எஸ. மயில் வாகனம் (109789ஏ), எம். கண்ணதாசன் (109789பி)

எம். விஜிதா [109789சி], எம். யோகலஷ்மி [109797 ஏ], கே. தங்கச்சிப்பிள்ளை [109798ஏ], வி. ஆறுமுக சாமி [109802ஏ], ஏ. வெற் செல்வன் [109802பி], ஏ. சின்னத்தம்பி [110006ஏ], என். மயில்வாகனம் [110011 ஏ], கே. ஆனந்தராஜ் [110020ஏ], ரி. பிரகாஷ் [110020பி[, ஆர். ராஜதுரை [110024ஏ]

என் இராஜதுரை [110024 சி], ஜெ. இராஜதுரை [110024பி], ஆர். முத்துலிங் கம் [110032ஏ], எம். சுமன் [110032பி], கே. சசிகுமாரன் [110039ஏ], எஸ். கணேசன் [110074ஏ], எஸ். மகேந்திரன் [110093ஏ], ஜி. றஜிதா (110094ஏ], ஜி. றஜிதா [110094பி], எம். சிவரட் ணம் [110099ஏ]

ஆர். சுந்தரலிங்கம்[111053 ஏ], எஸ். தஷிதன் [111053 பி], எஸ். சுஜீவன் [111053 சி], எம். நாகலிங்கன் [111144ஏ], என். ஆச்சிப் பிள்ளை [119500ஏ], சியா மதி [119500பி], என். ஞான கரன் [119500சி], கே. அர சியா [109213ஏ], எஸ். ஜானகி [109213பி], ஜெ. சரவணமுத்து [104148ஏ[

ஏ. நாகலிங்கம் (107632ஏ) என். தங்கரத்தினம் (107632 பி), என் தேவராசா(107632 சி), என். புனிதகிருபாகரா (109632ஏ), என். சிவராசா (109792ஏ), எஸ். பத்மாஜா (109799ஏ), எஸ். சிவாஜா (109799பி), கே, பவராசா (109800ஏ), வி.பி. ஏபேகே ரன் (110021ஏ), ஈ.சுகந்தினி (110021பி).

கே. செல்லப்பா (110045 ஏ), ஆர். சோமசுந்தரம் (110087ஏ), எவ். புனிதமலர் (110102ஏ), எவ். ஆர். றிச் சட் (118102 பி), பவளகந் தன் (110107ஏ), எஸ். சன சேகரம்(110129ஏ), வி புனித வதி (110131ஏ), வி. துஷ் யந்தி (110131பி), எஸ். விவேகானந்தன் (110131சி), எஸ். சந்திரதாஸ்(110778ஏ), ஏ. சந்திரதாஸ் (110778 பி) எஸ். கந்தசாமி(110783ஏ), கே. சுகந்தராஜ் (110783பி).

நல்லூர்

டாக்டர் ஆர். ஐ. டானியர் [093891 ஏ], எல். சுபஜனனி [093891 பி[, ஐ. நிவேதயனி [093891 சி], எஸ். சில்வியா [104492 ஏ], கே. அன்னலக் சுமி [ 104492 பி], ஆர். ராஜேஸ்வரன் [107219 ஏ], ஆர். ஹரிசங்கர் [107219பி], கே. சோமசுந்தரம் [ 109300 ஏ] எஸ். கஜாலாட்சி [109300 பி], எஸ். பாரதகிருஷ்ணா [109300 சி], என். நிர்மலன் [109513 ஏ], சி. நந்தகுமார் [109513பி], ஆர். கமலாதேவி 112329 ஏ], ஜி. திருப்பதி [112364 ஏ], ஜே. கனகலிங் கம் [112390 ஏ], ஜே. கனக லிங்கம் [112390 பி], எஸ்.ஏ. வலியா [112433 ஏ], ஜே. சுமதி [112434 ஏ], ஜே. அபி நயா [112434 பி], ஜே. ய்கு மேயன் [112434 சி], வை. நவசுந்தரன் [112580 ஏ], வை. நவசுந்தரம் [112580பி[, ஆர். ராசலிங்கம் [112595 ஏ]

என். ரட்ணம் [112603ஏ[, எஸ். ஜெகதீசன் [112607ஏ], ஜே. ஆரியதீசன்[112607பி], கே. நாகேந்திரம் [112665ஏ], பி.சிற்குணராசா[112696ஏ], பி. ராஜதுரை [113822 ஏ], ஆர். இரத்தினேஸ்வரி [113822 பி], ஆர். மேகலா [113822 சி], கே. குழந்தை வேலு [113936 ஏ], ஏ. வைரவராசன் [114038 ஏ], எஸ். மோகனராஜா [089425 ஏ ]

எஸ். ஸ்ரீதரன் (089426 ஏ), வை. மல்லிகாரதி (096713ஏ), எஸ். செல்வ ராஜா (099339ஏ), எஸ். காந்தரூபன் (099415ஏ), எஸ். சின்னராஜா (099458 ஏ), ஈ. இரவீந்திரநாதன் (104271ஏ), எஸ். பாதலிங் கம் [104428ஏ], டாக்டர் கே. குணராசா [104434ஏ]. ஆர் பரராஜசிங்கம் [104435 ஏ], ரி. பரராஜசிங்கம் [104435பி], ஏ. வி. மணி வாசகர் [104438ஏ], எஸ். ஞானேந்திரன் [104441ஏ],

கே. சந்திரசேகர் [104443 ஏ], சி. திலக்சி [104443பி[, பி. ஜெனாதரன் [107566ஏ], ஐ. தியாகராஜா [107575ஏ[, கே. பூபாலசிங்கம் [107592 ஏ]. எம். விசுவலிங்கம் [197611ஏ], ஆர். மனோ கரநாதன் [107624ஏ], வி. கனகசபை [107705ஏ], வி. ருகனேஸ்வரி [107705 பி], வை. சபாரட்ணம் [107706ஏ], பி. விஜயலக் சுமி [107707ஏ], பி. தினிஷா [107707பி], கே. பரமன் ]107707சி].

என். ரட்னேஸ்வரி (107708ஏ) பி. அஜந்தன் (107708பி), வி. செல்வரட் ணம் (107719ஏ), கே. துரை ராஜா (107724ஏ), பி. நவ குலசிங்கம் (107727ஏ), ரி. செல்வவதனி (107727பி), எஸ். வீரசிங்கம்(107732ஏ), எஸ். ஆறுமுகம் (107732பி), எஸ். தாட்சாயினி (107732 சி), வி. சிவஞானகுமாரி (109863ஏ), சாரங்கன் (109863பி), ஆர். ஐயாத் துரை (110075ஏ), ஆர் யோக லிங்கம் (110325ஏ).

எஸ். செல்லத்துரை (110346ஏ), எஸ். சின்ன ராஜா(110349ஏ), கே. சின்ன ராஜா (110350ஏ), ஆர். கமலாதேவி (112329ஏ), பி. ராஜதுரை (113922ஏ), ஆர். இரத்தினேஸ்வரி (113822பி), ஆர். மேகலா (113822சி), என். வசந்த நாயகம் (079132ஏ), சி. கந் தவனம் (093245பி), எஸ். பாலசுப்பிரமணியம் (093385 ஏ), ஆர். பவானந்தி(093385 பி), எஸ். கஜதரன் (093385 சி).

எஸ். சுராந்தன் [093385 கு), எஸ். தட்சாயினி [093385ஈ], பி. உமாதேவி (094480ஏ), பி. சுதர்சினி [094480பி] பி. சஞ்சிதா [094480சி], டபிள்யு வடி வேலு (103597ஏ), டபிள்யு சாலினி (103597பி), ரி. யோகேஸ்வரி (105149ஏ), என். கந்தவேல் (105896ஏ), ஜே. கந்தவேல் (105896பி), என். கந்தவேல் (109896சி), எல். இராசநாதன் (105896 டி)

எம். ரஜினிமாராணி (105998ஏ), பி. சின்னத் துரை (106010ஏ), எஸ். பால சிங்கம் (106010பி), எஸ். பாலசிங்கம் (106010சி), கே நித்தியானந்தமூர்த்தி (106064ஏ), எஸ். கனக ராசா (106109ஏ), ஐ. பிரஞ்சன் (106151பி), ஐ. கனகையன் [106151சி], ரி. சிவசுப்பிரமணியம் [106237ஏ], எஸ். ஸீத்த னாந் [106237[பி,

எஸ். மகாலிங்கம் [108623 ஏ], ஆர். சிறீதரன் [108624 ஏ], ரி. இரத்தினசிங்கம் [108703ஏ], ஆர். அன்னலிங் கம் [108716ஏ], ஏ. புனித வதி [108716பி], ஏ. தற்பரன் [108716சி], ஏ. லாவண்யா [108716டி], பி. குலவீரசிங் கம் [108724ஏ], பி. செல்ல மணி [108749ஏ], பி. ரவி சங்கர் [108749பி], என். இராசையா [108769ஏ], எஸ். அருணகிரிநாதன் [108796ஏ].

ஏ. துளசிகா [198696பி], ஏ. சிவசந்துரு [108796சி], ஆர். பூர்ணிமா ]10799ஏ[, எஸ். சங்கரப்பிள்ளை [108820ஏ], எம். நட ராசா [108820பி].

(தொடரும்)

## முச்சக்கர வண்டியுடன் 3 தமிழ் இளைஞர் கைது

### சந்தேகத்துக்கிடமாக நடமாடினராம்

கொழும்பு, ஓக. 25

முச்சக்கர வண்டி ஒன்றுடன் காணப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களைச் சந்தேகத்தின் பேரில் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த பல்லேகல படைமுகாமுக்கு விஜயம் செய்த சமயம் இந்த மூன்று இளைஞர்களும் அப்பகுதியில் சந்தே கத்துக்கிடமான வகையில் நடமாடியதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் வாசிகள் என்று தம்மைக் கூறிக்கொண்ட போதிலும் அவர்கள் மூவரும் கொழும்பில் இருந்தே அங்கு வந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)

## சந்நிதி ஆலயச் சூழலுக்கு ஜெனரேற்றர் மூலம் மின்

நெல்லியடி, ஓக. 25

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயச் சுற்றாடலுக்கு ஜெனறேற்றர் மூலம் மின் சார விநியோகம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை யின் ஆதரவில் இந்த ஜென றேற்றர் தொண்டமனாறு பகுதியில் பொருத்தப்பட்டி ருக்கின்றது.

மின் விநியோக ஆரம்ப வைபவம் கடந்த வாரம் வட பிராந்திய மின் அத்தியட்ச கர் சி. வல்லிபுரம் தலைமை யில் நடைபெற்ற போது இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதி பொது முகாமையாளர் எம். முத்து ரட்ணானந்தம், மின் விநி யோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

தொண்டமனாறு சந்நிதி ஆலய உற்சவ காலத்தின் போது இம் மின்விநியோகம் ஆரம்பித்திருப்பதனால் செல் வச் சந்நிதி ஆலயச் சூழலுக்கு இரவில் மின் ஒளி கிடைத்துள் ளது.

(ஐ-109)

## உதவிப்பண கொடுப்பனவு

கொழும்புத்துறை, ஓக.25

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் மற்றும் காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கடந்த ஜூலை மாதக் கொடுப்பனவுகள் தற்போது அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

இத் தருமப் பணத்தைப் பெறுபவர்கள் தத்தமது பகுதி அஞ்சல் அலுவலகங்களுக்கு நேரில் சென்று தத்தமது கொடுப்பனவுகளைப் பெற் றுக் கொள்ளுமாறு யாழ். பிர தேச செயலக நிர்வாக உத்தி யோகத்தர் தெரிவித்துள் ளார். [ஐ-30]

## தேவாரத் திரட்டு முற்றோதல்

யாழ்ப்பாணம், ஓக.25

அகில இலங்கை திருமுறை மன்றம் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறை பாராயணம் என் பன நாளை வியாழன் காலை 7.00 மணியளவில் ஏழாலை இலந்தகட்டி ஸ்ரீ பாதன வைரவர் ஆலயத்தில் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறவுள் ளது.

மாதாந்தம் இந்நிகழ்வுகள் இடம்பெற்று வருவது குறிப் பிடத்தக்கது.

[ஐ]

## இலங்கைக்கருகே துருக்கிக் கப்பல் மூழ்கியது

கொழும்பு, ஓக. 25

துருக்கி நாட்டுக்குச்சொந்த மான சரக்குக் கப்பல் ஒன்று கடந்த ஞாயிறு இலங்கை யின்தெற்குக்கரைக்குஅப்பால் உள்ள கடற்பகுதியில் மூழ்கி விட்டதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

ரஷ்யாவில்இருந்து உரத்தை ஏற்றிக்கொண்டு சீனா நோக் கிச் சென்று கொண்டிருந்த 'எம். வி. மலிக்ஸா' என்ற கப்பலே இலங்கையின் தெற் குக் கரையான தெய்வேந்திர முனையில் இருந்து சுமார் 16 மைல் தூரத்தில் சென்று கொண்டிருந்த சமயம் இயந் திர அறையில் நீர் புகுந்த தால் நீரில் மூழ்கியது:

அந்தக் கப்பலில் இருந்த 27சிப்பந்திகளையும் அப்பகுதி யில் சென்று கொண்டிருந்த சிங்கப்பூர் கப்பல் ஒன்று காப் பாற்றி சிங்கப்பூருக்கு அழைத் துச் சென்றதாகக் கூறப்பட் டது.

(உ-7)

## மகாஜன கட்டடத்தைப் பார்வையிட்டு மதிப்பீடு

வலி. வடக்கு, ஓக.25

மகாஜனக் கல்லூரியை அடுத்த மாதம் முதல் பழைய இடத்தில் இயங்கவைப்பதற்கு வேண்டிய முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

வலி. வடக்குப் பிரதேச செயலாளர் திருமதி ப, திலக நாயகம்போல், வலிகாமம் கல்விவலய பிரிவு III உதவிக் கல்விப்பணிப்பாளர்க. கணேச லிங்கம் ஆகியோர் பாடசா லைக்கட்டடத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ள னர்.

பாடசாலைக் கட்டடத்தில் மாணவர் விடுதி உட்பட 35 அறைகள் உடனடிப் பயன் பாட்டுக்கு உகந்ததாக இருப்ப தாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## அருள்மிகு சிவபூதவராயர்...

(ஐந்தாம் பக்கத் தொடர்)

தீர்த்த நாளாகக் கொண்டு மகோற்சவம் நடைபெற்று வந் தமை குறிப்பிடக் கூடியதாகும்.

ஆலயத்தின் வளர்ச்சியானது குறுகிய காலத்தில் அதிக சிறப்பைப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இடையில் மக் களுக்கு மாற்றப்பட்ட பரிபாலனம் மீண்டும் சபையிடமே ஒப் படைக்கப்பட்டது.

1976 இல் இருந்து கட்டுத்தேராக நடைபெற்ற உற்ச வம் 1988இல் பஞ்ச தளரதமாக அமைக்கப்பட்டு சிறப்புப் பெற்றது. அதைத் தொடர்ந்து 1994 இல் தனி நண்பர் ஒரு வரால் சப்பறம் அமைக்கப்பட்டுச் சிறப்பைப் பெற்றது.

இவ்வாறு தொடர்ந்து வளர்ச்சி பெற்ற எம்பெருமா னின் ஆலயம் இன்று மகோன்னதவளர்ச்சிபெற்று மகா கும்பா பிஷேகம் நடைபெறுவது மிகச்சிறப்பானதாகும். இவையாவும் எம்பதிவாழ் மக்களினதும் எம்பதி வெளிநாட்டு அன்பர்களி னதும் அயராத உழைப்பினால்தான் நிறைவுபெற்றன.

இந்தத் தலம் 1998 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய் யப்பட்டு ஒரு வருட காலத்திற்குள் கும்பாபிஷேகம் நடைபெறு வது பெருமாளின் அருளன்றி வேறில்லை. புதுக்கோயில் களாக அம்பாள், நடராஜர், சண்டேஸ்வரர், தட்சணா மூர்த்தி, ஐயனார் மற்றும் மாடத்துத்தெய்வங்கள் என்பன அமைந்துள்ளன. வசந்தமண்டபம், மண்டபங்கள், கொட்டகை கள் என்பன புனர்நிர்மாணம் பெற்றுள்ளன. இன்று மனோன் மணி சமேத சிவபூதவராயருக்கும் விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், சண்டேஸ்வரர், ஐயனார், நடராஜர், தட்சணா மூர்த்தி மற்றும் மாடத்துத் தெய்வங்கள் என்பவற்றிற்கும் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவது நாம் செய்ததவப் பேறாகும்.

எம்பெருமானின் ஆலயம் சிறப்புற அமைவதற்கும், மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவு பெறுவதற்கும் அய ராது உழைத்த அனைவர்க்கும் எம்பெருமானின் அருளும் ஆசி யும் கிடைக்க அவர் தம்பாதார விந்தங்களைப் பணிந்து நிற் கின்றோம்.

— ஆலய பரிபாலன சபையினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## பயன் தரும் முயற்சி

செயற்கைக் கிருமி நாசனிகளைப் பயன்படுத்தாமல், பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட மரக்கறிச் செய்கை வெற்றி அளித்துள்ளது. விவசாயத் திணைக்களத்தின் ஆதரவுடன் கோண்டாவிலில் மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சி வெற்றி தந்ததனையொட்டி எதிர்வரும் சனிக்கிழமை வயல்விழா நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

இரசாயன உரமும் செயற்கைக் கிருமிநாசனிகளும் இன்றி லாபகரமாக விவசாயம் செய்ய முடியாது என்ற நிலை இப்போது நிலவுகிறது. குறுகிய காலத்தில் அதிக அறுவடை பெறும் நோக்குடன் விவசாயிகள் இவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதும் வழமையாகி விட்டது.

இதனால் மரக்கறி மற்றும் விளைபொருள்களைப் பயன்படுத்தும் மக்களே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இயற்கை மூலிகைகள் போலன்றி, இரசாயனப் பொருள்கள் அளவுக்கு அதிகமாக உட்கொள்ளப்படுவதால் உடலுக்கும் பெரும் தீங்கு ஏற்படும்.

இது குறித்துச் சிறிதும் உணர்வு இல்லாதவர்களாக விவசாயிகள் செயற்படுவதும் உண்டு. உரிய கால அட்டவணைக்குப் புறம்பாகவும் முரணாகவும் மரக்கறி மற்றும் விவசாய உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துகிறார்கள். இது நுகர்வோர்களின் — மக்களின் உடலில் இரசாயனப் பொருள்கள் அதிகளவில் செறிந்து பல ஆபத்தான நோய்களுக்கு வித்திடுகிறது.

இத்தகைய மரக்கறிகள் மற்றும் விளைபொருள்களை மக்கள் வாங்கி உட்கொள்வதால் அவர்கள் உடலில் நாளாந்தம் நஞ்சு சேர்கிறது. அதனால் அவர்கள் நாளாந்தம் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இரசாயனப் பொருள்கள் உடலின் திசுக்களை மணிக்கு மணி அரித்து, எரித்துப் பொசுக்கின்றன.

இதனால் விரைவில் உயிராபத்தை விளைவிக்கக் கூடிய புற்றுநோய் போன்ற வியாதிகள் நுகர்வோர்களைப் பீடிக்கின்றன. இது தொடருமானால் பெரும் சமூக அழிவு உண்டாகும். போரினால் உண்டான அழிவுக்கும் மேலாக மக்கள் நோய்களால் சாகநேரிடும்.

ஆகையால் இரசாயன உரம் மற்றும் கிருமிநாசனிப் பாவனையை உரிய முறைப்பிரகாரம் கையாள்வதற்கான பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்படுவது மிகவும் அவசியம்,

கோண்டாவிலில் பரீட்சார்த்த தோட்டத்தில் செய்யப்பட்டது போல, இயற்கைக் கிருமிநாசனிகளைப் பயன்படுத்துவதையேனும் பரந்த முறையில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். இது விடயத்தில் விவசாயத் திணைக்களம் குடாநாடு முழுவதிலும் உள்ள விவசாயிகளுக்கு அறிவூட்ட வேண்டும். கருத்தரங்குகள், செய்முறைப் பயிற்சிகள் என்பன இதற்குப் பெரிதும் உதவும்.

இரசாயன உரவகைகள் அதிக விளைச்சலைத் தரும் என்பது அனுபவமாகிவிட்டது. எனினும் அளவுக்கதிகமான உரப் பாவனை விளைபொருள்களுக்கு நஞ்சூட்டுகின்றன. முழுக்க முழுக்க இரசாயன உரவகைகளை நம்பியிருக்காது எமக்குக் கிடைக்கும் இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்துவதை மீண்டும் பிரபல்யப்படுத்துவதும் அவசியம். இங்கேயே உற்பத்தி செய்யக் கூடிய கூட்டுப்பசளைகளை மாற்றாகப்பயன் படுத்துமாறு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் மக்களுக்கு உண்டாகும் பலவகைப் பாதிப்புகளைத் தடுக்கலாம்:

# வல்வினை போக்கி வரம்பல நல்கும்

# செல்வச்சந்நிதியான் செல்வக்குமரன்

ஈழமணித் திருநாட்டின் பழம்பெரும் முருகஸ்தலங்களில் கதிர்காமம், மண்டூர், செல்வச்சந்நிதி எனும் முப்பெருமானாலயங்கள் ஆகமமுறை சாராதவையாக, குன்றாப் பொலிவுடன் நின்றிலங்குகின்றன. இவற்றுள் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் வரலாற்றுக்கு முந்திய காலப் பெருமையுடையது. ''சந்நிதி'' எனும் பதம் சந்+நிதி எனப் பிரிபட்டு (சத்—உண்மை, நிதி—செல்வம்) உண்மையான செல்வம் எனப் பொருள்படுகின்றது. இந்தக் கலியுகத்தில் அருட்பொலிவுகாட்டி, தேவசேனாதிபதியாகி, பக்தி நெறிக்குரிய செல்வமாக விளங்குபவன் இந்த ஆலயக் கந்தன்.

இதிகாச புராணத்துடன் தொடர்புடைய இந்த ஆலய வரலாறுசிறப்புக்குரியது. முருகப்பெருமானின் தூதுவராக வந்த வீரவாகுதேவர் திருச்செந்தூர்செல்லும் வழியில்தற்போது ஆலயம் அமைந்துள்ள பகுதியில், ஆற்றங்கரை மரநிழலில் தங்கி வேல் ஒன்றை அமைத்து சந்திக்காலப் பூஜை செய்தார். இவரின் வேண்டுதலை ஏற்றருளிய திவ்வியபதியே இப்புண்ணிய க்ஷேத்திரமாகும்.

ஐவராசு என்பவன் தனக்கு முன்பு நடந்தவற்றைக் கூறி மீண்டும் கந்தருவப் பதவி அளிக்குமாறு முனிவரிடம் வேண்டினான். முனிவர் அவனை அழைத்துக்கொண்டு கதிர்காமம் சென்று அங்கு முருகனைத் தரிசித்த பின் முருகன் ஐவராசுவுக்கு ''திருச்செந்தூர் செல்லும் வழியில் வீரவாகு தேவர் வழிபட்ட இடம்வலலியாற்றின்கரையில் உள்ளது என்றும்'' அங்கு தவமிருந்து முத்தியடைவாய் என்றும் பணித்தார் முருகனின் கட்டளைப்படி வல்லியாற்றை வந்தடைந்து பூவரச நிழல் ஒன்றில் தவமிருந்து முருகனை வழிபட்டு முத்தியடைந்தார். இவரது சமாதி மீதே தற்போதைய ஆலயம் அமைந்துள்ளது.

பல காலங்களுக்குப் பின்னர் மருதர் கதிர்காமர் என்பவர் இந்த ஆற்றில் பரதவத் தொழிலை மேற்கொண்டிருந்தபொழுது முருகன் ஆடு மேய்க்கும் சிறுவனாக வந்து அவரைக் கரைக்கு

### செ. சுதர்சன்

அழைக்க அவர் வந்து யாது? என வினாவியபோது அவன் கதிர்காமரிடம் ''உமக்குஇனி இந்த உழைப்பு வேண்டாம் உமக்குத் தேவையானவற்றை நான் தருவேன். உமது கஷ்டமெல்லாம் நீங்கும் நீ அறுபத்துநான்கு ஆலம் இலைகளில் உணவு படைத்து வழிபடு'' எனக் கூறினார்.

அதிசயித்த கதிர்காமர் நீவிர் யார்? என்று வினாவ முருகன் தன் உருவத்தைக் காட்டி அவ்விடத்தில் முன்பு நடந்த விடயங்களைச் சொல்லி தனக்கு பூசை செய்யுமாறு வேண்ட கதிர்காமர் பூசை முறைகள் மந்திரங்கள் எனக்குத்தெரியாது. நான் எப்படிப் பூசை செய்யலாம் என்று கேட்ட போது முருகன் கண்களை மூடுகஎனக்கூறி அவரை நொடிப் பொழுதில் கதிர்காமம் அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பூஜை முறைகளைக்காட்டி நீவிரும் வாய்கட்டி மந்திரமின்றி பூசை செய்க எனக் கூறிவேல் ஒன்றையும் வழங்கி இதை அமைத்து வழிபடுக எனக்கூற கதிர்காமர் அதைப் பெற்று முருகன் கூறியபடி பிரதிஷ்டை செய்து வழிபட்டார்.

இப்படியாக பூசை முறைகள் நடைபெற்று வரும் பொழுது ஒரு நாள் முருகன் கதிர்காமரிடம் ''நான் கதிர்காமம் செல்ல வேண்டும் என்னை வழியனுப்புக''எனக் கூற பயணச் சாப்பாட்டிற்கென உழுத்தம்பிட்டு படைத்து கதிர்காமத் திருவிழாவிற்கு வழியனுப்பி வைத்ததாகவும், கதிர்காம உற்சவம் முடிந்த நாள் இரவில் கோயில் மணி ஓசை கேட்க கதிர்காமர் கோயிலுக்குள் நுழைந்த போது முருகன் நிற்பதைக் கண்டார். முருகன் ''பயணத்தால் களைப்படைந்து விட்டேன் பயற்றம் துவையலும் இளநீரும் தருக'' என கேட்டார். கதிர்காமர் முருகனுக்கு அவற்றை வழங்கியதாகவும் ஆலய வரலாறுகள் கூறுகின்றன.

முருகப்பெருமான் நாயன்மார் அறுபத்து மூவருடன் கூடவாகவே மகேஸ்வர பூஜையினை ஏற்றருள்கின்றமை காரணமாக அறுபத்திநான்கு ஆலமிலைகளில் இங்கே தற்பொழுது வெள்ளமுது நிவேதிக்கப்படுகின்றது. கதிர்காமருக்கு அருளியதன்படி சனி வாரம் தோறும் முருகனுக்கு வெந்நீர் அபிஷேகம் செய்யப்படுகின்றது. இத்தலத்திலுள்ள செல்வபுஷ்கரணி தீர்த்தம் சகல தோசங்களையும் போக்கி சௌபாக்கியத்தை நல்கவல்லதாகும்.

இத்தகைய வரலாற்றுப் பெருமையைக் கொண்டு விளங்கும்செல்வச்சந்நிதி முருகனுக்கு இன்று இரதோற்சவம நடைபெறும் இந்நன்னாளில் அவனை நம் உள்ளத்திலிருந்தி வணங்கி நல்லருள் பெறுவோமாக! ★

---

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### மஞ்சத்தில் மயிலோன்

எடுப்பு

மஞ்ஞையதி லமர்ந்த நல்லூர்மாமுருகப் பெருமானே
மஞ்சமதில் ஏறியெமை மகிழ்விக்க வருவாயே
[மஞ்ஞை...]

தொடுப்பு

தஞ்சமளித் தடியார்க்குத் தண்ணளிகள்
சேர்த்துவிடும்
அஞ்சுமுகன் தம்பியேயுன் அழகுமஞ்சம் ஏறிவாராய்
[மஞ்ஞை...]

முடிப்பு

நெஞ்சமதில் நிறைந்தவனே நீடுஅருள் சுரந்தவனே
கொஞ்சு தமிழ் மொழியிறைவா குமராசெவ்
வேள்முருகா
கெஞ்சுகிறேன் நல்லையிலே குடியமர்ந்த
நாயகனே உன்
மஞ்சமதில் ஏறியிந்த மன்னுலகைக் காக்கவாராய்
[மஞ்ஞை ...]

— அனலையூர்ச் சேந்தன்

### மகிழ்ச்சியினைத் தா!

கஞ்சனம் போக்கி யாபேரும்
வஞ்சம் இன்றி வாழணும் — வன்னிப்
பஞ்சம் ஓடிப் போகணும் — மக்கள்
நெஞ்சம் எல்லாம் உன்னிடம் — வேலா
மஞ்சமேறி மகிழ்ச்சியினைத் தா!

— முத்துமாரி

### மஞ்சத்தில் எழுந்து காத்திடையா!

அஞ்சுமுகன் தம்பியே ஆறுமுக வேலவா
நெஞ்சுருகி நிற்கின்றோம் நிம்மதியைத் தாராயோ
கொஞ்சுமொழி மங்கையரும் கோலவிழி அன்னையரும்
பிஞ்சுமொழி மழலைகளும் பேரிடரில் தத்தளித்து
வெஞ்சமரில் வீழ்ந்தின்று வேதனையில் உழல்கின்றார்
மஞ்சமதில் எழுந்தின்று மாநிலத்தைக் காத்திடையா.

—— ப. க. மகாதேவா

---

### சந்நிதியான் ஆச்சிரமத்தில்

யாழ்ப்பாணம், ஓசு. 25

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய மகோற்சவத்தையொட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் தெய்வீக கலை நிகழ்வில்— தேர்த்திருவிழாவானஇன்று மாலை 5.00மணிக்கு சத்தியதாசன் இசைக்குழுவினரால் ''சத்தியவான் சாவித்திரி'' எனும் தலைப்பிலான வில்லுப்பாட்டு நடைபெறும். [ரி]

### உதயவாக்கு

மனமே! நிறைந்த புகழுடைய, நிகரற்ற வள்ளி நாயகியைப் பக்கத்தில் உடைய, அழகிய கையில் வேலாயுதத்தை உடைய, முருகப்பெருமானை நீ துதிப்பாயாக.

—— உலகநீதி

### நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்தை ஒட்டி இளங் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசை அரங்கில் இன்று மாலை 5.30 மணிமுதல் 7.00 மணி வரை கே. நடராசாவின் இசைக்கச்சேரி இடம்பெறும். இதற்கு அணிசேர் கலைஞர்களாக எஸ். திவாகரன் (வயலின்) எஸ். சிவசிவா (மிருதங்கம்) ஆகியோர் கலந்துகொள்வர். (ரி)

* * *

நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்குவீதியில் அமைந்துள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் நல்லூர் சைவ மகாசபை நடத்தும் தெய்வீகத் தொடர் இசைச்சொற்பொழிவு இன்றுபுதன்கிழமை மாலை 5 15 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் வாகீச கலாநிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.

(11 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை

ஆவணி 9

வியாழக்கிழமை

திதி: பூரணை

பின்னிரவு 5-53 வரை

நட்சத்திரம்: அவிட்டம்

பின்னிரவு 1.23 வரை


பூரணை விரதம்

சுபநேரம்: 7.35–9 05

ராகுகாலம்: 1.35 –3 05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---



### உவமை கடந்த இன்பம்

உவமை கடந்த வின்பமெல்லார்க்கு முண்டு
தவஞ் செய்வார் தாமறிவர் தப்பார்— சிவனருளை
நோக்கென்றான் நோக்க நொடியளவிலேயின்பம்
தேக்கிற் றென் சிந்தை தெளிந்து!

— யோகர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் ஆசியாவிலே கண்ணி வெடிகள் அதிகம் புதைக்கப்பட்ட இடம் இலங்கை

## கருத்தரங்கில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 25

தென்னாசியாவிலேயே கண்ணிவெடிகள் மற்றும் ஆள்களுக்கெதிரான கண்ணிகள் அதிக எண்ணிக்கையில் இலங்கையிலேயே புதைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு வாதுவிரில்இடம் பெற்றகண்ணிவெடி தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் இத் தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் அரச சார்பற்ற அமைப்புக்கள், சமய அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் படை அதிகாரிகளும் பத்திரிகையாளர்களும் கலந்துகொண்டனர்.

கனேடிய இராணுவத்தின் முன்னாள் தளபதி ஒருவர் விசேடமாக இந்த மாநாட்டில் பங்கு பற்றி கண்ணி வெடிப்புப் பாதிப்புக்கள் குறித்து விளக்கமளித்தார்.

தென்னாசியாவில் இலங்கையிலேயே அதிக எண்ணிக்கையில் கண்ணிகள் புதைக்கப்பட்டிருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாக மாநாட்டில் கூறப்பட்டது.

மக்களைப் பாதிக்காத வகையில் எவ்வாறு இந்தக் கண்ணிவெடிகளைப் பாவிப்பது என்ற தொழில் நுட்பம் தொடர்பாக இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது.

கிளேமோர் கண்ணிகள் குறிப்பிட்டவர்களை இலக்கு வைத்துப் பாவிக்கப்படுவதால் அது தடை செய்யப்படவேண்டிய கண்ணி அல்ல என்று மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

நாடு அல்லாத இயக்கங்கள் கண்ணி வெடிகளை கையாள்வதைத் தடை செய்வது தொடர்பாக விடுதலைப்புலிகள் அமைப்பு உட்பட ஏனைய அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

ஆள்களைக் கொல்லும் கண்ணிகளைத் தடைசெய்வதற்கு உடன் நடவடிக்கை எடுப்பது என மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

(ஐ-3)

## கூட்டுறவு ஊழியர்கள்

# சனிக்கிழமை பெறும் லீவு அரை நாளாக கருதப்படும்

வலி. வடக்கு, ஓக.25

கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் சனிக்கிழமைகளில் எடுக்கும் லீவுகள் இனிமேல் அரை நாள் லீவாகவே கணிக்கப்படும்.

இது பற்றிய அறிவித்தலை வடக்கு—கிழக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

சனிக்கிழமைகளில் லீவு எடுப்பவர்களின் லீவு முழு நாள் லீவாக கருத்தப்படுமென கூட்டுறவு ஆணைக் குழுமுன்னர் அறிவித்திருந்தது

இதனைத் தொடர்ந்து கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கங்கள் சனிக்கிழமைகளில் பெறப்படும் லீவை அரை நாளாகக் கொள்ளக் கோரி கூட்டுறவு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்திருந்தன.

அதனையடுத்தே சனிக்கிழமை லீவு அரை நாளாகத் கணிக்கப்பட வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளது.

(ஐ-86)

## கொழும்பு வீதித் தடைகளால்:

# சுமார் 150 பயணிகள் விமானத்தைத் தவறவிட்டனர்

கொழும்பு, ஓக. 25

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிப்பீடமேறியதன் 5 ஆவது ஆண்டு நிறைவு தினக் கொண்டாட்டங்களை ஒட்டி கடந்த சனியன்று தலைநகரில் பல வீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டதால் உரிய நேரத்துக்கு விமான நிலையத்துக்குச் செல்ல முடியாதுபோன 150 பயணிகள் தங்கள் விமானங்களைத் தவறவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூர், மாலைதீவு, சென்னை, மலேசியா, பாகிஸ்தான், டுபாய், குவைத் ஆகிய நாடுகளுக்குப் போய்ச் சேர வேண்டிய பயணிகளே விமானங்களைத் தவறவிட்டதாகவும் —

அவர்களுக்குப் பின்னர் மாற்று பயண ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-8)

## சிரமதானம்

யாழ்ப்பாணம், ஓக 25

நெடுந்தீவு வைத்தியசாலை வளவில் உள்ள வேலிகள் இங்குள்ள ஊழியர்களினால் சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டுள்ளன.

(இ-109)

## இருபாலை கிழக்கில்

# இருபது பயனாளிகளுக்கு வீடு கட்டக் கொடுப்பனவு

வலி. கிழக்கு ஓக. 25

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இருபாலை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் 20 பயனாளிகளுக்கு குடியிருப்பதற்கான வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு முதற்கட்டக் கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபா இன்று புதன்கிழமை வழங்கப்படவுள்ளது.

தலா 55 ஆயிரம் ரூபா செலவில் கட்டப்படும் இவ் வீடுகளுக்கு தேசியவீடமைப்பு அதிகார சபை 20 ஆயிரம் ரூபாவை கடனாகவும் 10 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாகவும் வழங்கும். மிகுதி 25 ஆயிரம் ரூபா பிரதேச செயலகத்தினால் கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது.

இதேவேளை —

கடந்த 19 ஆம் திகதி அச்சுவேலி வேவிக்கிராமத்தில் குடியிருப்பதற்கு வீடுகள் இல்லாத 24 குடும்பங்களுக்கு முதற் கட்டக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் எஸ்.மாசிலாமணி கோப்பாய், பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன், பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆ. கதிரமலை ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்கினர்.

(ஐ-180)

# வயல் விழாவும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், ஓக. 25

விவசாயத் திணைக்களமும் கோப்பாய் நலன் காக்கும் பிரிவும் இணைந்து நடத்தும் வயல் விழாவும் கருத்தரங்கும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளன.

இருபாலை — கோப்பாய் வீதியில் பழனியாண்டவர் கோயிலுக்கு அண்மையில் இரசாயன கிருமிநாசனிகளை பயன்படுத்தாமல் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இந்த விழா நடைபெற உள்ளது.

மக்கள் நலன் காக்கும் பிரிவைச் சேர்ந்த வ. செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதமவிருந்தினராகவும் கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன், யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் டாக்டர் நச்சினார்க்கினியன் யாழ் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி என். விஜயரட்ணம் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் பி. விக்னேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்தாது அல்லது அவற்றைக் கட்டுப்படுத்தி மரக்கறி வகைகளை உற்பத்தி செய்தல் உற்பத்திச் செலவைக் குறைத்தல், நச்சுக்கலப்பற்ற மரக்கறிகளைப் பாவிப்பதற்குத் தூண்டுதல், காலநிலைக்கேற்ப புதிய விவசாய முயற்சிகளை அறிமுகப்படுத்தல், சுயவிதை உற்பத்தியைத் தூண்டுதல். சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்துதல், தொழில்நுட்பப் பயிற்சி அளித்தலும் புதிய இனங்களை அறிமுகப்படுத்தலும் ஆகிய நோக்கங்களை முன்னிறுத்தி இந்தப் பரீட்சார்த்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது

இவற்றை விவசாயிகளிடம் பரவலாக அறிமுகப்படுத்தும் நோக்கில் இந்த வயல் விழாவும் கருத்தரங்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(இ-6)

# சிப்பாய்களின் வீடுகளில் தேடுதல் நடத்த தனிப்பிரிவு

கொழும்பு, ஓக 25

யுத்தப் பிரதேசங்களில் பணி புரிந்து வரும் சிப்பாய்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரின் வீடுகளைச் சோதனையிடும் நோக்கில் விசேட தேடுதல் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது.

விடுமுறையைக் கழிக்க சொந்த இடங்களுக்குச் செல்லும் சிப்பாய்கள் கள்ளத்தனமாக ஆயுதங்களை எடுத்துச்சென்று தமது பகுதியில் அமைதிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படும் குற்றச் சாட்டுக்களை அடுத்தே இந்த விசேட தேடுதல் பிரிவு ஏற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-க-8)

CEFE - Competency Based Economies Through Formation of Enterprises

ஸ்ரீலங்கா ஜேர்மன் CEFE நிகழ்ச்சித்திட்டம்
GTZ யாழ்ப்பாணப் புனர்வாழ்வுச் செயற்றிட்டம்
வடக்கு - கிழக்கு மாகாண கைத்தொழில் திணைக்களம்
என்பவற்றுடன் இணைந்து
யாழ். பல்கலைக்கழகம்
வழங்கும்

தொழில் முயற்சியாண்மைப் பயிற்சி நெறி
ஐந்தாவது பயிற்சிப்பட்டறை

தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவுள்ளோரும் தொழில் முயற்சிகளை வெற்றியுடன் நடத்தி விரிவாக்கம் செய்ய விரும்புவோரும் வெற்றியின் இரகசியங்களை அனுபவபூர்வமாக உணரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள தீவிரப் பயிற்சி நெறி.

பயிற்சிக்காலம்: 14 நாள்கள்

பயிற்சி முறை: செயல்வழிக்கற்றல் (Action Learning) பயிற்சிக்காலத்தின் போது பயிலுநர்கள் ஒரு சுயதொழிலுக்கான பூரணத்துவமுடைய தொழிற்றிட்டம் ஒன்றைச் சிறந்த முறையில் தயார் செய்து கொள்ள முடியும்.

பயிற்சிப் பதிவுக்கட்டணம் ரூபா 1000.00

பயிற்சிக்குரிய ஏனைய செலவுகள் அனைத்தும் இலவசம்
விண்ணப்பங்களை ரூபா 10 செலுத்தி CEFE அலகிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்
பயிற்சியானது செப்ரெம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் ஆரம்பமாகும்.

விண்ணப்ப முடிவு திகதி: 15 - 09 - 1999

விண்ணப்பங்களைப் பெறவும் பூர்த்தி செய்து அனுப்பவும் உங்களுக்குத் தேவையான முகவரி:

Coordinator CEFE Unit
University City Hall
Jumma Mosque Lane, Jaffna

(C/8627)

ஓராண்டு நினைவலைகள்



பிறப்பு 12 — 06 — 1940

இறப்பு 03 — 09 — 1998

அமரர் சீனியர் தியாகராஜா

திதி: 25 - 08 - 99
ஆவணி ஓணம்

எமது இனிய ராசாவே
ஆவணி ஓண நன்னாளில்
எமை விட்டுப் பிரிந்தனையோ?

நண்பர்கள்

65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(68457)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவ சூழலை குழப்பும் சக்திகளுக்கு துணை போகாதீர்கள்

## இந்துசமயப் பேரவை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக. 25

பக்திபூர்வமாக நடைபெறும் நல்லூர் ஆலய உற்சவ நிகழ்வுகளைக் குழப்பும் வகையில் தீய நடவடிக்கைகளில் ஈடுபட சில தீய சக்திகள் முனைவதாகத் தகவல் கிடைத்துள்ளது. அவற்றுக்குத் துணை போகாது பக்திபூர்வமாக கண்ணியத்துமடன் இந்துஇளைஞர்கள் செல்யபடவேண்டும்.

— இந்து சம்யப் பேரவை மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் போனற பலஅருளாளர்களதும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்ற சைவத் தமிழ் வெற்றி வீரர் சமுதாயம் கண்ணியத்துடன் களதும் பாதம் படிந்த இடமாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் சூழல் காணப்படுகிறது. எனவே அந்தச் சூழலில் பக்தியையும் புனிதத்தையும் பேண அனைவரும் முன்வரவேண்டும்.

சொல்லொணாத் துன்பத்தின் மத்தியில் எமது மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த வேளையில் எம்மை நாமே ஆளப் பழகிக்கொள்ள வேண்டும். எமது கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் பக்தியையும் சகலரும் மிகஉன்னிப்பாகக் கவனிக்கின்றனர் என்பதை நாம் மறந்து ஒருபோதும் செயற்படக்கூடாது.

எமது சமயத்தின் எழுச்சியைப் பிரதிபலிக்கும் நல்லூர் மஹோற்சவ விழாவை சிறப்புற நடத்திமுடிக்க இளைஞர் செயற்படவேண்டும். சில வேற்றுமதக் குழு இளைஞர்கள் இப் பக்திபூர்வ நிகழ்வை விளங்காது குழப்பும் வகையில் தீயநடவடிக்கையில் ஈடுபட முயல்வதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. இத்தகைய குழப்ப நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் உடனடியாக அவற்றை நிறுத்தி ஒத்துழைப்புத் தரவேண்டும்.

திருவிழா நிகழ்வுகள் அமைதியாக நடைபெற ஒத்துழைப்பு வழங்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் நாம் தீர்மானித்துள்ளோம்.

அடியார்கள் ஆலயத் திருவிழா முடிவுற்றதும் வழிபாடுகளை முடித்துக்கொண்டு வீடுகளுக்குத் திரும்புவதன் மூலம் பல்வேறு நெருக்கடிகளில் இருந்து விலகிக்கொள்ளலாம்.

—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ- 7)

# அவசர நோயாளருக்கு உதவ மாநகர சபைக்கு அம்புலன்ஸ்

## ஐ. நா. உதவியுடன் கிடைத்துள்ளது

யாழ்ப்பாணம், ஒக. 25

யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதிக்கு புதிய அம்புலன்ஸ் வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

சீடா திட்ட நிதி உதவியுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் சார்பாக சுமார் 25 லட்சம் பெறுமதியான இந்த அம்புலன்ஸ் நேற்று முன்தினம் மாநகர சபை சுகாதாரப் பிரிவிடம் கையளிக்கப்பட்டது.

அடுத்த வாரமளவில் இந்த அம்புலன்ஸ் தனது சேவையை ஆரம்பிக்கும் என்று சுகாதாரப்பிரிவு வைத்திய அதிகாரி ஆர். தெய்வேந்திரன் தெரிவித்தார்.

அவசர நோயாளர்கள் மற்றும் விபத்துகளில் காயமடைவோரை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்கு இந்த அம்புலன்ஸ் பயன்படுத்தப்படும் என்றும்—

ஊரடங்கு வேளைகளில் அவசர நோயாளர்களை அவர்களது இடத்திற்கு சென்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு கூட்டி வருவதற்கான சேவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதி கிடைத்ததும் ஆரம்பிக்கப்படும் என்றும் —

இந்தச் சேவை குடாநாடு முழுவதுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் —

அவர் மேலும் தெரிவித்தார்.

வாகன வசதி இல்லாததால் அவசர சிகிச்சை பெறமுடியாது ஏற்படும் உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் நோக்குடன் இந்த அம்புலன்ஸ் சேவை நடத்தப்படவிருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

(உ-6)

# 761தபால்பொதிகள் இன்று வரும்

யாழ்ப்பாணம், ஒக. 25

திருகோணமலையில்நீண்ட காலமாகத் தேங்கிக்கிடந்த— குடாநாட்டுக்கான —761 தபால் பொதிகள் இன்று காங்கேசன்துறை வரும் 'லங்காமுடித்த' கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

அத்துடன் திருமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு இன்றுவரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலிலும் 65 தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது

(உ-3)

# மக்களை ஆத்மீகத்தில் ஈடுபடுத்திய சாதனையாளர் 'ஆத்மஜோதி'

தன் வாழ் நாள் முழுவதும் காவியுடை தரியாத சந்நியாசியாக வாழ்ந்து மக்களை ஆத்மீகத்தின் பால் ஈர்த்திழுத்துச் சென்ற ஞானி ஆத்மஜோதி. வயது, அந்தஸ்து, சாதி, குலம், கல்வி, பிறப்பு என்ற உலகியற் பெருந்துறைக் கணிப்பீட்டு அளவியலுக்குள் அமிழாது வாழ்ந்தவர்.

இத்தகைய உயர்நிலை இவருக்கு இவர் கொண்டிருந்த ஞானியர்கள் சகவாசத்தால் வந்த தென்றால் அதில் மிகையொன்றில்லை.

யாழ்ப்பாணம் ஸ்ரீகடையிற் சுவாமிகள் மரபிலுதித்த ஸ்ரீ சிவயோக சுவாமிகளது அருட்பார்வை இவர் ஆத்மீக வாழ்விற்கு மூலமானது. ஏழாலையைப்பிறப்பிடமாகக் கொண்ட ஆத்மஜோதி அவர்கள் தனது மாணவப் பராயத்திலும் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்ட காலத்திலும் அடிக்கடி யோகர் சுவாமிகளைச் சந்திப்பாராம்.

இத்தகைய அந்நியோன்யமான உறவு சுவாமிகளுக்கும் ஆத்மஜோதிக்கும் இடையிலிருந்தது. இவ் வாத்மீகத் தொடர்வும், ஆத்மஜோதியின்பெற்றோரின் அசைவற்ற ஆத்மீகவாழ்வும். ஆத்மஜோதியின் ஆத்மசோதியாக மிளிரச் செய்தது.

தனது ஆசிரியத் தொழில் காரணமாக நாவலப்பிட்டியில் இருந்த காலத்தில் மலைநாட்டில் வாழ்கின்ற இந்தியத் தமிழ் மக்களின் நல்வாழ்விற்கு அயராது உழைத்த பெருமைக்குரியவர்.

இத்தகைய பெருமகனின் ஆத்மஜோதி நிலையத்தை 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் போது சிங்களக் காடையர்கள் எரித்துச் சாம்பலாக்கி இந்நாட்டில் நீங்காத கறையைப் படியச் செய்துள்ளனர்.

அதன் விளைவாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த ஆத்மஜோதி அவர்கள் தமிழ் நிலத்திலுள்ள எல்லா ஆலயங்களுக்கும் பாத யாத்திரையாகச் சென்று அடியார் புடை சூழ வழிபட்டார்.

இந்து மதத்தின் பெருமையை நிலைநாட்டுமுகமாக இந்தோனேசியா, கனடா, பிரான்ஸ், சிங்கப்பூர், மலேசியா, மொரீசியஸ் போன்ற பல்வேறு நாடுகளுக்குச் சென்றார். உலகில் நடைபெற்ற பல்வேறு சைவ மாநாடுகளில் கலந்து கொண்டு சைவத்தின் பெருமையை நிலை நாட்டினார்.

15 இற்கு மேற்பட்ட இந்து சமய நூல்களை ஆய்ந்தறிந்தெழுதி வெளியிட்டார்.

பலபட்டங்களும் பாராட்டுகளும் அவரைத் தேடிவந்த போதும் அவற்றைச் சிவார்ப்பணம் செய்து வாழ்ந்த உண்மைத் துறவி ஆத்மஜோதி.

இந்து சமயப் பேரவை மூலம் தமது கொள்கையை நிலைநாட்டும் வகையில் செயலகத்தினால் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தைப் பொறுப்பேற்று அதை முன்னேற்றி செயலிற் காட்டினார். இவற்றைப் பேணுவதே அவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

**ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் நான்காவது நினைவு தினம் இன்றாகும்**

**சி. சக்திகிரீவன்**

# மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்)

டச் செயலை சம்பந்தப்பட்ட கட்சி செய்துள்ளது. இது அவர்களின் வழமையான செயல்வழி நடைமுறையில் ஒன்று'' — என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

'உதயன்' விவகாரத்தால் தமிழ் இயக்கங்களிடையே நேரடியாகக் கருத்துமோதல் உருவாவதைத் தவிர்க்கும் நோக்குடனும்—

ஒரு கட்சி மீதான குற்றச் சாட்டுகளுக்கு திட்டவட்டமான ஆதாரங்கள் முன் வைக்கப்படாததாலும்—

சம்பந்தப்பட்ட அறிக்கையில் மாற்றுக் கட்சியைப் பெயர் குறிப்பிட்டு குற்றம் சுமத்திய பகுதிகளை நீக்கிவிட்டு—

அதேசமயம் தமது தரப்புக் கருத்தைத் தெரிவிக்கும் புளொட் உப தலைவரின் உரிமையை ஏற்று—

அவரின் அறிக்கையை இங்கே பிரசுரிக்கின்றோம்;-

யாழ். பிரதேசம் பெயரளவில் விடுவிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகவே இன்று காணப்படுகிறது. அங்கு வசித்துவருகின்ற மக்கள் இன்றும்கூட உணவு, குடியிருப்பு போக்குவரத்து, இரவுநேர ஊரடங்கு போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து துன்பகரமான நிலைகளின் மத்தியில்தான் தங்களது வாழ்க்கையை நகர்த்தி வருகின்றனர்.

இப்படியான இந்த மக்கள் தங்களுக்கு நேருகின்ற துன்ப துயரங்களைபத்திரிகை எனும் ஊடகம் ஒன்றின் மூலம்தான் வெளிப்படுத்தியும் அறிந்தும் வருகின்றனர். உதாரணமாக யாழ். செம்மணி, வலிகாமம் காணி சுவிகரிப்பு, விமான— கப்பல் போக்குவரத்துக்கள். கல்வி சார்ந்த பயிற்சிநெறி எல்லாமே யாழ். உதயன் பத்திரிகை ஊடாகவே வெளிவந்து சர்வதேச சமூகத்தின் பார்வைக்கும் கொண்டு செல்லப்பட்டன.

அந்த வகையிலே 'உதயன்' நாளிதழ் தனித்துநின்று யாழ். மண்ணில் சகல மக்களின் சகல விதமான மன ஓலங்களையும் வெளிப்படுத்திவருவது கண்கூடு.

உதயன் பத்திரிகையின் விமர்சனத்திற்கு 'புளொட்' இயக்கமான நாங்களும் கூட பல சந்தர்ப்பங்களில் முகங்கொடுத்தே வந்துள்ளோம். நாங்கள் உட்பட யாழ். மண்ணில் செயற்படும் சகல இயக்கங்களின் செயற்பாடுகளும் செய்திகளாக, விமர்சனங்களாகத் தினமும் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. எமது இயக்கம் இப்பத்திரிகையின் சுயாதீனமானதும் சுதந்திரமானதுமான செயற்பாடுகளில் ஒருபோதும் குறுக்கிட்டது கிடையாது.

பத்திரிகைச்செய்தி என்பது மக்களின் குரலாக, போர் முரசாக ஒலித்து வருவதால், இயக்கங்களின் செயற்பாடுகள்கூட மீள் பரிசீலிக்கப்பட்டு தங்களின் சரியான திசை நோக்கியபயணத்திற்கு உதவியாகவும் — உறுதுணையாகவும் அமைந்து வருகிறது என்பதே உண்மை.

இந்நிலையில் கடந்த 21-08-99 அன்று 'உதயன்' பத்திரிகை அலுவலகம் கைக்குண்டுத்தாக்குதலுக்கு ஆளானது கண்டு நாங்கள் மிகுந்த கவலையுறுவதோடு, எங்களின் வன்மையான கண்டனங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மக்கள் எல்லா முனைகளிலிருந்தும் துன்பங்களை அனுபவித்து, அத்துன்பங்களும் அழுகுரல்களும் தங்கள் தங்கள் குடிலுக்குள்ளேயே முடங்கிவிடக் கூடாது என்பதற்காய், உதயன் நாளிதழ் தனது காத்திரமானதும், மெச்சத்தக்கதுமான பங்களிப்பை பல்வேறுபட்ட சிக்கல்-சிரமங்களின் மத்தியிலும் செவ்வனே செய்து வருகிற இவ்வேளையில், அந்நாளிதழின் அலுவலகம் மீது இத்தாக்குதல் நடந்துள்ளமை சகல தரப்பினராலும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

உலகில் விடுதலை பெற்ற நாடுகள் விடுதலைக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளில் பத்திரிகையும் எழுத்துத்துறையும் எத்துணை பங்களிப்பைத் தந்திருக்கின்றன தந்துவருகின்றன என்பதைப் போராட்டக் களத்தில் உள்ள இயக்கங்கள் உணர்ந்து கொள்வது மிகவும் இன்றியமையா ஒன்றாகும். ஆகவே நாங்கள் இக்கட்சியினரின் இச்செயலை மிகவும் வன்மையாகக் கண்டனம் செய்கின்றோம். இது பற்றிய முழு விசாரணையை உடனடியாக மேற்கொள்ளுமாறு யாழ். பிராந்திய இராணுவத் தளபதியையும் நாங்கள் எழுத்து மூலமாகக் கேட்டிருக்கின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பத்திரிகை ..

(2 ஆம் பக்கத் தொடர்)

வேதனை தரும் விடயமாகும். மேலும் பத்திரிகையின் பணி தொடர சம்பந்தப்பட்டவர்கள் தமது தனிப்பட்ட குரோதங்களை மறந்து எப்பிரச்சினை ஆயினும் ஜனநாயக ரீதியில் பேசித் தீர்ப்பதே சிறந்த அணுகுமுறையாகும்.

சம்பந்தப்பட்டவர்கள் இம் மாதிரியான நடவடிக்கைகளை கைவிட்டு பத்திரிகை சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்க வேண்டும் — என்றுள்ளது.

### மருத்துவ பீட மாணவர் ஒன்றியம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து பல பத்திரிகைகள் வெளிவந்த போதிலும் தற்போது வெளிவரும் ஒரேயொரு பத்திரிகையான 'உதயன்' மீது சில தினங்களுக்கு முன் நடைபெற்ற மனக்கசப்பான சம்பவத்தினை இனிவரும் காலங்களில் நடைபெறாது பார்க்கவேண்டியது அறிவுசார் சமுதாயத்தின் முக்கிய கடமையாகும் — என்றுள்ளது.

### பல்கலைக் கழக எழுதுவினைஞர் தொழில் நுட்ப அலுவலர் ஒன்றியம்

யாழ். பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழில் நுட்ப அலுவலர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ் மக்களின் உரிமைக் குரலாக ஒலிக்கும் உதயன் — சஞ்சீவி மீதான தாக்குதலை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஊடகத்துறை மீதான— இவ்வாறான— தாக்குதல்களின் மூலம் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை எந்த வகையிலும் கட்டுப்படுத்திவிட முடியாது என்பதை தாக்குதல் நடத்தியோர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இன்றைய சமகால சூழலில் உதயனின் பணி மிகவும் மகத்தானது, துணிச்சலான முறையில் கருத்துக்களை வெளியிடும் அதன் வீரியம் மிக்க சேவை இவ்வாறான தாக்குதல்களைக் கண்டு ஒருபோதும் பாதிக்கப்படக்கூடாது என்பதே எமது அவாவாகும்.

அதற்கு பல்கலைக்கழகச் சமூகத்தவரின் ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லூர்.........

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

நித்தியானந்த சர்மா பக்கவாத்திய சகிதம் ''திருத்தொண்டர் புராணத்தில் வென்ற ஐம்புலனா மிக்கீர்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

(இ-30-103)

★ ★ ★

கொழும்புத்துறை, ஒக. 25

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி கோயில் உற்சவத்தையொட்டி நல்லூர் ஆலய கிழக்கு வீதியில் உள்ள அறுபத்து மூவர் குரு பூசை மடத்தில் யாழ். மாவட்ட இந்துப் பேரவையின் ஆதரவில் நடைபெற்று வரும் தமிழ் மந்திரங்களாகிய கந்தரனுபூதி— திருமந்திரம் தொடர் சொற்பொழிவுகளில் இன்று புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு 'தவயோகியின் தமிழ் மந்திரம்' (திருமந்திரம்) என்ற தலைப்பில் பலாலி ஆசிரியர் கலாசாலை உப அதிபர் விரிவுரையாளர் சிவத்தம்பி நித்தியானந்த சிவ மகாலிங்கம் உரை நிகழ்த்துவார்.

(இ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

நடத்தும்

## முழுநிலா நாள் கருத்தரங்கு

இடம்: கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம்: நாளை (26-08-1999) வியாழக்கிழமை
பிற்பகல் 3.30 மணி (புதிய நேரம்)

தலைமை: திரு. க. சி. குகதாசன்
(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

கருத்துரை: "கல்வி நிர்வாகக் கட்டமைப்பு"
கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை
(கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்)

அனைவரும் வருக!

பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஆதரவு:
**சாந்தி கபே**
கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம் (சி/8633)



## 'போயா' கருத்தரங்கு

பொருள்: கருச்சிதைவு – தாக்கம்
வீடியோ படமும் உரையாடலும்

காலம்: 26-08-99 வியாழக்கிழமை

நேரம்: பிற்பகல் 3.30 மணி (இ.நே.)

இடம்: "அகவொளி"
குடும்ப வளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

வாரீர் வந்து பயன் பெறுவீர்

– இயக்குநர்


'அகவொளி'
யாழ்ப்பாணம் (68449)



பேராசிரியர்

## சு. வித்தியானந்தன் நினைவாக

## நல்லூரில் இன்று அன்னதானம்



தமிழ்க் கடவுளாகிய நல்லை முருகக்கடவுளின் மஞ்சத்திருவிழாவாகிய பத்தாம் நாள் அமரர் வித்தியானந்தன் நினைவாக நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி மடத்தில் அன்னதான நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்த மகேஸ்வர பூஜையில் அமரர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களது மாணவர்கள், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், தமிழ் அன்பர்கள், முருகனடியார்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அமரர் சு. வித்தியானந்தன் அவர்கள் எமது தமிழ் மொழிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

அண்மையில் அன்னாரின் நினைவாக கனடாவாழ் தமிழ் மக்கள் ஏழாயிரம் டொலர் பெறுமதியான பல்வேறு அம்சங்களையும் கொண்ட நூற்தொகுதியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூல்நிலையத்துக்கு வழங்கியுள்ளனர்.

இந்நூல்கள் கனடாவாழ் தமிழ் மக்களின் சார்பாக திரு செ சோமாஸ்கந்தன் அவர்களால் அண்மையில் யாழ், பல்கலைக்கழகத்துக்கு நேரில் வழங்கப்பட்டுள்ளன

அமரர் வித்தியானந்தன் குடும்பத்தினர்.
(68435)


### கனடாவில்...

[முதலாம் பக்கத் தொடர்]

1988 ஆம் ஆண்டு கனடா சென்ற இவர் தமது மனைவி பிள்ளைகளை 93 ஆம் ஆண்டு அங்கு அழைத்து அவர்களுடன் வாழ்ந்து வந்துள்ளார்.

மூத்த மகன் ஒருவர் இவருக்கு உண்டு. இரண்டாவது மகனே தகப்பனுடன் ரயிலில் மோதுண்டு மரணமாகியுள்ளார்.

அவரது மனைவியான உமா கடந்த 20 நாள்களுக்கு முன்னர் பெண் குழந்தை ஒன்றைப் பிரசவித்திருந்தார்.

சம்பவதினம் நண்பர் ஒருவர் வீட்டுக்கு சென்று வருவதாகக் கூறி தனது மகனுடன் இவர் காரில் புறப்பட்டார் என்றும்—

பின்னர் விக்ரோரியா ரயில் நிலையத்தில் காரை நிறுத்திவிட்டு ரயில் முன் பாய்ந்தார் என்றும்—

விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### பீரிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

யும் — வர்த்தக சம்மேளனத்தின் —முயற்சிகளுள் ஒன்றாக இப்பேச்சுக்கு ஏற்பாடாகியுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு முன்வைத்துள்ள யோசனைகளில், இதுவரை இருகட்சிகளுக்கும் இடையில் இணக்கம் காணப்படாத விடயங்கள் குறித்து நாளைய பேச்சில் ஆராயப்படவிருப்பதாகக் கூறப்பட்டது. (உ-3)

### மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்)

பொலீஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள வீதி நேற்றுப் போக்குவரத்துக்கு மூடப்பட்டது.

எனினும் மாலையில் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

பிற்பகலுக்குப் பின்னர் அரச வாகனங்கள் மற்றும் போக்குவரத்துச் சபை பஸ்கள் மட்டுமே இப்பாதை ஊடாகச் செல்ல அனுமதிக்கப்பட்டன.

இந்த நிலைமையால் நகரில் பதற்றம் நிலவியது. (உ-3)

### பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஏற்பாடுகளுடன் யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது. (உ-3)

### வெட்டுப்...

[முதலாம் பக்கத் தொடர்]

என்று கோரியும்—

கோட்டா முறையை அதிகரிக்க வேண்டும் என்று கோரியும்—

தொடர் போராட்டங்களை நடத்துவது என்று மாணவர்கள் முடிவு செய்துள்ளனர். (உ-3)


## கணக்கீடு

புள்ளி வழங்கல்
திட்டம் – 1

**A/L 99**

பார்வையிட விரும்பும்
மாணவர்கள்
நாளை 9 மணிக்கு
சமுகம் தரவும்.

**D. M. I.**

ஸ்ரான்லி வீதி,
யாழ்.

– D. SAM

(சி/8632)


#### கோப்பாய் பிரதேச செயலக பிரிவில்

## வன்னியால் வந்தோருக்கு 'யுனிசெவ்' உதவிப் பொருள்

வலி. கிழக்கு, ஓக. 25

ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் வன்னியில் இருந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு வீட்டுப் பாவனைப் பொருள்கள் சிலவற்றை 'யுனிசெவ்' நிறுவனம் அன்பளிப்புச் செய்யவுள்ளது.

நாளை வியாழக்கிழமை இவர்களுக்கான பொருள்களை வழங்க பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தனி அங்கத்தவர் அல்லாத குடும்பங்களுக்கே இந்தப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

பாய், சவர்க்கார வகைகள் என்பனவே வழங்கப்படவுள்ளன. (ஐ-180)

## விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி அதிகாரிகள் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், ஓக. 25

நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிறுவனங்களில் யாழ். செயலக விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி உத்தியோகத்தர்கள் திடீர் சோதனைகளை நடத்தினார்கள்.

இந்தச் சோதனைகளின் போது கடைகளில் விலைப் பட்டியல்கள் போடப்படாதது கண்டு பிடிக்கப்பட்டது.

விலைப்பட்டியலைப் போடுமாறும் இல்லாது விட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வர்த்தகர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

இதேவேளை யாழ். அரசாங்கஅதிபரின்விசேட பணிப்பின் பேரில் யாழ். நகரிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்கு விஜயம்செய்த விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் பொருள் விநியோகத்தினை மேற்பார்வை செய்தனர். (இ-5-ரி)

## கலந்துரையாடல்

சுன்னாகம், ஓக. 25

சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் நடத்தும் கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில்நடைபெறும்.

க. வேல்தஞ்சன் தலைமையில் நடைபெறும் 'இந்துத்துவமும் அணுவாயுதமும்' என்ற தலைப்பிலான இந்தக் கலந்துரையாடலில் வே. சேந்தன் தொடக்கவுரை நிகழ்த்துவார். (உ-27)

### இந்த...

[முதலாம் பக்கத் தொடர்)

ஆராயப்படலாம் என்றும் அவர் சொன்னார்.

அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாகவும்—

இந்தியாவில் பொதுத் தேர்தலை அடுத்து வரப்போகும் புதியஅரசு இலங்கை தொடர்பாக எடுக்கும் நிலைப்பாட்டை அறிவதற்காகவும்—

தேர்தலை அரசு பிற்போட யோசிப்பதாக அரசியல் விமர்சகர்கள் கூறினர். (உ-3)

### 9 தற்கொலை...

(முதலாம் பக்கத் தொடர்)

களில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகவும்— அவர் தெரிவித்தார்.

கொழும்பில் அண்மைக் காலத்தில் ஒருஇரவில் மட்டும் பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் நேற்று முன்தினமே கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## 27 படையினருக்கு நேபாளத்தில் சிறை

காட்மண்டு, ஓக. 25

நேபாளத்தில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 27 இராணுவ வீரர்களுக்கு 2 வருட 9 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்துபவர்களிடம் இருந்து கைப்பற்றிய போதைப் பொருள்களை அரசிடம் ஒப்படைக்காமல் தாமே விற்பனை செய்து பணத்தைப் பங்கிட்டுக் கொண்டனர் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (இ-க)

## ஆளுநர் நாளை யாழ். வருவார்

யாழ்ப்பாணம், ஓக.25

வடக்கு -கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா நாளை யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் பிரதேச சபைகளில் ஏழு பிரதேசசபைத் தலைவர்களுக்கு வாகனங்களைக்கையளிக்கும் வைபவத்தில் அவர் பங்குபற்றுவார்.

அதன்பின்னர் யாழ்ப்பாண நிலைமை தொடர்பாக அரச அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆளுநர் பதவியேற்றபின்னர் இரண்டாவது தடவையாக அவர் யாழ்ப்பாணம் வருகின்றார். (உ-3)

### செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

சர்வதேசக்குழு யாழ். அலுவலக அதிகாரியை இன்று சந்திக்க இருப்பதாகவும்— அவர்கள் தெரிவித்தனர். (உ-3-7)


## A.V.M. ராஜன், புஸ்பலதா குழுவினர் பங்குபற்றும்

மாபெரும் நிகழ்ச்சி

## அன்பு வெள்ளம்

இடம்: திறந்தவெளி அரங்கு,
ஊர்காவற்றுறை
இன்று (25-08-99) புதன்கிழமை
காலை 11-00 மணி (புதிய நேரம்)
பிரவேசம் இலவசம்.

நாளை முதல்
உடுவில் மகளிர் கல்லூரி மைதானம்.
(சி/8312)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-08-99 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org